சிவமயம்



# பெரியையா

## ஓர் சகாப்தம்



நினைவு மலர்

திரு. க.கெஜரெத்தினம்

நிலாவெளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை நிலாவெளியைச் சேர்ந்த

அமரர்

# திரு. கயிலாயபிள்ளை கெஜரெத்தினம்

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்த

31ம் நாள் நினைவு மலர்

15.03.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மைப் பெற்றெடுத்துப் பண்போடு பாசம் சேர்த்து வளர்த்து உற்ற பருவத்திற் கற்றிட வைத்து உயர்ந்த நிலைக்கு ஆளாக்கி எங்கள் வழிப் பேரப் பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்து உறவினரும் ஏனை ஊரவரும் உங்களைப் "பெரியையா" என்று அன்பும் மரியாதையும் கலந்து அழைத்திட நூற்று ஆறு ஆண்டுகள் கடந்து உடல் உறுதி தளர்ந்த போதும் உள உறுதி தளராது ஞாபகப் பெட்டகமாய் வாழ்ந்து உலகை விட்டு நீங்கினாலும் எங்கள் உள்ளங்களை விட்டு என்றும் நீங்காதிருக்கும் எங்கள் குலவிளக்கே, உங்கள் பொற்பாதங்களில் இந் நினைவுமலர் சமர்ப்பணம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



அமரர்

# கயிலாயபிள்ளை கெஜரெத்தினம்

மண்ணில் 15.03.1914

விண்ணில் 13.02.2021

## திதி வெண்பா

வருடமது சார்வரியில் வாய்த்த மதி மாசிதனில்
பொருந்திவரு திதி பூர்வ துதியையில் – பெருமை தரு
பெரியையாப் பேர்பெற்ற கெஜரெத்னப் பேராளர்
அரியதொரு பேறாக முருகனடி அணைந்தாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தனிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனதுக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோரமுத மானாய்
மறைநான்குமானாய் ஆறங்கமானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுமோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி
உலகமெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலாக் குருந்தமேவிய சீர்
அழுத்தனே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

## திருவிசைப்பா

மாலுலா மனந்தந்து என்கையில் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாம் தேவர் குலமுழுதாளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாம் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாம் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னுமென் மெல்லியல் இவளே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயண னொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அண்ணலே எனை ஆண்டுகொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக் கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் - முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய - குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற - முனிவோனே
உகந்த பாசம் கயிறொடு தூதுவர் - நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் - வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய -பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.கெஜரெத்தினம் ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாறு

திருகோணமலை மாவட்டத்திலேயே நூற்று ஏழு வயதை எட்டிப்பிடிக்கும் வரை வாழ்ந்த ஒரு முது பெரும் பிரஜையான உயர்திரு.கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்கள் 13.02.2021ல் சிவபதம் அடைந்ததை முன்னிட்டு இன்று 15.03.2021ல் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இடம் பெறும் வேளையிலே வெளியிடப்படும் 31ம் நாள் நினைவு மலரிலே அன்னாரது வாழ்க்கைக் குறிப்பினை அவரே காலத்துக்குக் காலம் தன் கைப்பட எழுதிவைத்த பல பதிவேடுகளிலிருந்து ஐயாவின் ஆண்பிள்ளைகளில் மூத்தவனாகிய நான் அவரது பதிவுகளைத் தொகுத்தும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் நான் கண்டு அனுபவித்த விடயங்களையும் சேர்த்து இக் கட்டுரையில் வெளியிடுவதில் ஆத்ம திருப்தி அடைகிறேன்.

திருகோணமலை மாவட்டம் கட்டுக்குளப்பற்று கிழக்கு குச்சவெளியில் கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருந்த கனகசுந்தரப் பெருமாள் வழிவந்த வேலுப்பிள்ளை கனகர் என்பவருக்கும் வயிரம்மை என்பவருக்கும் 1881ம் ஆண்டளவில் மகனாகப் பிறந்தவர் திரு. **கனகர் கயிலாயபிள்ளை (ஐயாவின் தந்தையார்)**

யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கில் வசித்த வினாசித்தம்பி முருகேசு அவர்களுக்கும் கந்தரோடையில் பிறந்த கதிர்காமர் மகள் சின்னப்பிள்ளைக்கும் மகளாகப் பிறந்தவர் **முருகேசு மாணிக்கம் (ஐயாவின் தாயார்)** - இணுவிலில் அந்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல அண்ணாவி முருகேசு நாகலிங்கம், அண்ணாவி முருகேசு சுப்பையா ஆகியோரின் சகோதரி

**கனகர்கயிலாயபிள்ளைக்கும், முருகேசு மாணிக்கத்துக்கும்** பிரம்மாதீவருடம் ஆங்கில ஆண்டு 1914 மார்ச் மாதம் 15ம் திகதி திருகோணமலை நகரில் மூத்த மகனாகப் பிறந்தவர்தான் **கெஜரெத்தினம் ஐயா** அவர்கள்.

## படிப்பு - தடைகள் - திருப்புமுனைகள்

ஐயா தனது ஐந்தாவது வயதில் நிலாவெளி சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சிவச்சாமிக் குருக்களால் வித்தியாரம்பம் செய்யப்பட்டு நிலாவெளி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று 1925ம் ஆண்டு 5ம் வகுப்பில் சித்தியடைந்தார். அக் காலத்தில் அங்கு 5ம் வகுப்பு வரையே வகுப்புகள் இருந்த காரணத்தினால் மேற்கொண்டு படிக்க முடியாமற் போனது. திருகோணமலை நகரத்துக்குச் சென்று படிப்பதற்கும் விடுதியோடு கூடிய பாடசாலைகள் இல்லாமையாலும், தினமும் நிலாவெளியிலிருந்து நகருக்குச் சென்று வரப் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையாலும் தனது கல்வியைத் தொடரமுடியாமல் வீட்டோடு இருந்துவிட்டார். வீட்டோடு இருந்தாலும் அவரது தந்தையார் அவரைப் படிப்பின்றி விட்டுவைக்கவில்லை. தனக்குப் பரிச்சயமான நீதி நூல்கள் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றிலிருந்து செய்யுள்களை விளக்கி மனனம் வெய்வித்தவராம். இவ்வாறு 1926, 1927 ஆகிய இரண்டு ஆண்டுகளும் வீட்டோடு இருந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாளில் ஒரு மாணவன் தொடர்ச்சியாக நான்கு நாட்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்காவிடில் தலைமை ஆசிரியர் அதற்கென உரிய படிவத்தில் விபரத்தை எழுதி கிராம விதானையாரிடம் கையளிக்க வேண்டும். விதானையார் விசாரித்து திருப்தியான காரணம் காட்டப்படாவிடின் வழக்கு வைக்கப்படும். இந்த ரீதியில் ஒரு சமயம் மேற்படி பாடசாலையில் புதிதாக நியமிக்கப்ட்ட இரு ஆசிரியர்களான திரு தர்மலிங்கம் திரு கே.ஆர்.இரத்தினசிங்கம் ஆகியோர் அவ்வாறான சில மாணவர்களின் விபரப் படிவத்தை அப்போது விதானையாராக இருந்த ஐயாவின் தந்தையிடம் கையளித்துக் கதைத்துக 'கொண்டிருந்தபோது அங்குமிங்கும் ஓடித்திரிந்த ஐயாவைக் கண்டுவிட்டு விதானையாரிடம் விசாரித்தபோது "இவர் எனது மகன். 5ம் வகுப்பு சித்தியடைந்து அதற்கு மேல் இங்கு வகுப்புகள் இல்லாமையினால் வீட்டில் இருக்கிறார்" என்று சொன்னதும் அவ் ஆசிரியர்கள் ஐயாவை அழைத்து, "உமக்குத் தொடர்ந்து படிக்க விருப்பமா?" என்று தன்னிடம் கேட்டபோது மனதார விருப்பம் இல்லாத போதும் தகப்பனாருக்குப் பயத்தில் ஆம் என ஒத்துக்கொண்டாராம். அவ் ஆசிரியர்கள் தலைமையாசிரியருக்கு விடயத்தைக் கூறி அடுத்த நாளே ஐயா பாடசாலைக்கு அழைக்கப்பட்டு ஒரு தனி மாணவனாக 6ம் வகுப்பில் வைத்துப் படிப்பித்து அடுத்த வருடம் 7ம் வகுப்பிலும் படிப்பித்து, பின்னர் 8ம் வகுப்பு வைக்கக் கல்விப் பகுதியினரிடம் அனுமதி பெறப்பட வேண்டி இருந்தது. ஆனால் தனி ஒரு மாணவனுக்காக அனுமதி தரமாட்டார்கள் என்பதை தெரிவித்து மட்டக்களப்பு அரசடி சாதனா பாடசாலையில் சேர்ப்பதற்குரிய சகல ஒழுங்குகளையும் அவர்களே செய்து கொடுத்தார்கள். அவர்கள்தான் தனக்கு வாழ்வளித்த தெய்வங்களாகத் தான் உணர்ந்ததாகவும் ஐயா அடிக்கடி கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930ம் ஆண்டு ஆனி மாதம் மேற்படி பாடசாலையில் சேர்ந்து கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்பில் (Junior School Certificate – J.S.C.) சித்தியடைந்து, சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்பில் (Senior School Certificate – S.S.C.) படித்துக்கொண்டிருந்த வேளை தந்தையார் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்ட காரணத்தினால் படிப்புத் தடைப்பட்டுத் தொடர்ந்து படிக்கமுடியாமல் மீண்டும் வீட்டில் முடக்கம். மூத்த பிள்ளை எத்தனை நாட்களுக்கு அப்படி இருப்பது. தாய்க்கும் தனக்கும் தம்பியாருக்கும் வாழ்வாதாரத்துக்காக நிலாவெளி உப்பளச் செய்கையின்போது கரைக் காவல் என்று சொல்லப்படும் காவல் கடமையில் 1933, 1934ம் ஆண்டுகளில் ஈடுபட்டிருந்தபொழுது ஒரு நாள் திருகோணமலை நகருக்குச் சென்றிருந்தார். இவர் மட்டக்களப்பு அரசடிப் பாடசாலையில் படித்தபோது அங்கு ஆசிரியராகவிருந்த திரு எம். கே. சிதம்பரப்பிள்ளை அவர்கள் எதேச்சையாகச் சந்தித்து இவரது படிப்பு இடை நின்ற காரணத்தை அறிந்து அடுத்த ஆண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்க வைத்துத் தன்னுடன் நகரிலிருந்து படிக்கவைத்து 1935 ம் ஆண்டில் S.S.C. சித்தியடைய உதவிசெய்து ***"தந்தையொடு கல்வி போம்"*** என்பதைப் பொய்யாக்கினார்.

அப் பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்தமை காரணமாக ஐயாவுக்கு 1936ம் ஆண்டிலேயே ஆசிரியர் நியமனம் கிடைத்தது. 25.03.1936ல் சாம்பல்தீவு மெ.மி.த.க. பாடசாலையில் உதவியாசிரியராக முதல் நியமனம் பெற்றுப் பின்னர் திருகோணமலை பெருந்தெரு மெ.மி.த.க. பாடசாலையிலும், நிலாவெளி மெ.மி.த.க. பாடசாலையிலும் உதவியாசிரியராகப் பணியாற்றி 10.06.1957ல் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்றுக் கும்புறுபிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெ.மி.த.க. பாடசாலையில் 03.05.1964 வரையும் பின்னர் 04.05.1964 முதல் நிலாவெளி மெ.மி.த.க. பாடசாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றி 14.03.1971ல் ஓய்வு பெற்றார்.

அவர்கள் ஓய்வுபெற்றதையொட்டி நிலாவெளிப் பாடசாலைச் சமூகம் (ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்) இணைந்து பாடசாலை மண்டபத்தில் பிரிவுபசார விழாவினை மிக விமர்சையாக நடத்திக் கொண்டிருந்த வேளை அங்கு தனது வாகனத்தில் வந்த ஒருவர் திடீரென மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக அழையா விருந்தாளியாக உள்ளே வந்ததும் விழா ஏற்பாட்டாளர்கள் சபையோர் ஒரு கணம் அதிர்ந்து விட்டார்கள். அவர் வேறு யாருமல்ல. இப் பகுதிக்குரிய கோட்டக் கல்வி அதிகாரி ஆவார். அவரது முன் அனுமதி இன்றி நடைபெறும் இவ்விழாவைக் கண்டித்துத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கவே வந்துள்ளார் என்று யாவரும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த வேளை அவர் மேடையில் ஏறி ஐயாவின் பாதங்களைத் தொட்டு வணங்க அதனைச் சற்றும் எதிர்பாரத்திருக்காத ஐயாவும் கோட்டக் கல்வி அதிகாரி அவர்களைத் தோள்களில் தொட்டு ஆசீர்வதித்துத் தூக்கிவிடக் கண்களில் பனித்த துளிகளை விரல்களால் தட்டிவிட்டு விழா ஏற்பாட்டாளர்கள் காட்டிய ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து அவர் உரையாற்ற அழைக்கப்பட்டார்.

''இப் பெரியாரது பிரிவுபசார விழாவுக்கு என்னை அழைக்காமல் எனக்கு ஒரு தகவல் கூடத்தராமல் நான் பிறர் சொல்லக் கேட்டுத்தான் இங்கு வந்துள்ளேன்'' என்று கவலையுடன் கூறித் தனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பைக் கூறலானார்.

''நான் நிலாவெளி மெ.மி.த.க. பாடசாலையில் படித்து ஐந்தாம் வகுப்பு வித்தியா அபிவிருத்திப் பணப் பரீட்சையில் (தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப் பரிசில் பரீட்சை) சித்தியடைந்தும் எனது தந்தையார் இறந்து விட்ட காரணத்தினால் அதனை அனுபவிக்க வேண்டிய பாக்கியம் இன்றி வீட்டோடு இருந்து விட்டேன். ஒரு சில நாட்களின் பின்னர் அன்றைய நிலாவெளி மெ.மி.த.க. பாடசாலையின் தலைமையாசிரியர் நான் வந்தாறுமூலை செல்லாததை அறிந்து அதற்கான காரணம் கேட்டு வரும்படி திரு.கெஜரெத்தினம் ஐயாவை நிலாவெளியிலிருந்து சாம்பல்தீவிலுள்ள எனது வீட்டுக்குத் தூது அனுப்பியிருந்தார். ஐயா அவர்கள் வீட்டுக்கு வந்து எனது அம்மாவுடன் தான் வந்த விடயத்தைக் கூறி என்னைக் கட்டாயம் வந்தாறுமூலைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி எனது படிப்பைத் தொடரவைக்கும் படி வற்புறுத்திக் கூறினார். ஆனால் அம்மாவோ எனது மகனை யார் வந்தாறுமூலைப் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிப்போவது? எமது உறவினர்கள் சிலரிடம் கேட்டுப் பார்த்தேன் அவர்களும் பின் வாங்கி விட்டார்கள் என்று கூற ஐயா அவர்கள் கூட்டிப்போக ஆளில்லையென்றால் நான் கூட்டிப்போய்ப் பாடசாலையில் சேர்த்து விட்டு வருவதாகக் கூறித் தாமாகவே முன்வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார். அவரும் மடட்டக்களப்பு அரசடிப் பாடசாலை விடுதியில் தங்கிப் படித்த அனுபவத்தில் விடுதிவாழ்க்கை தொடர்பான அறிவுரைகளையும் கூறி நல்ல முறையில் படித்து முன்னேறி அம்மாவை மகிழ்ச்சிப் படுத்த வேண்டும் என்று ஆசி கூறித் திரும்பிவிட்டார்.

ஐயாவின் ஆசிப்படியும் அம்மாவின் பிரார்த்தனைப்படியும் நான் படித்து முன்னேறி ஆங்கில ஆசிரியனாகப் பணிபுரிந்து படிப்படியாகப் பதவி உயர்ச்சிபெற்று இன்று நான் கோட்டக் கல்வி அதிகாரியாக உங்கள் முன் நிற்பதற்கு எனக்கு உந்துசக்தியாக இருந்தவர் கெஜரெத்தினம் ஐயா என்பதைப் நன்றிப் பெருக்கோடு சொல்வதில் பெருமையடைகிறேன். குடும்பத்தில் மூத்தவனான நான் எனது தம்பியர் இருவரையும் முன்னேற்ற நிலைக்குக் கொண்டு வரக்கூடியதாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக எங்கள் குடும்பத்துக்கு விடிவு காட்டிய உயர் திரு.கெஜரெத்தினம் ஐயாவுக்கு நாங்கள் என்றும் நன்றிக்கடன் பட்டவர்களாவோம். நான் இங்கு வந்து அவரை வாழ்த்தி அவரிடமிருந்து ஆசிபெறுவதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்'' என்று தன் உரையை முடித்தார்

அனைவருக்கும் அத்தகவல் அன்றறிந்த புதினமாகவே இருந்தது. ஏன், ஐயாவின் குடும்ப உறுப்பினர்களாகிய எங்களுக்குக் கூட அவை அன்றுதான் தெரியவந்தது. காலத்தினால் தான் செய்த உதவியைப் பிறருக்குச் சொல்லித் தம்பட்டம் அடிக்காமல் உதவியைப் பெற்றவர் தனது வாயாலேயே நன்றியுணர்ச்சியுடன் அன்று வெளிக்கொண்டு வரும் வரை அவ் விடயத்தை ஐயா தனக்குள் வைத்துக் கொண்டார். ஐயா அவர்கள் தனது தந்தை இறந்தபின் தனது படிப்பு பாதிக்கப்படாமல் திரு.எம்.கே. சிதம்பரப்பிள்ளை என்ற தயாளசீலர் தனக்கு உதவியதை நினைவு கூர்ந்து திரு.தங்கராசா அவர்களின் எதிர்காலத்துக்குத் தான் ஒரு திருப்புமுனையாக அமைந்திருக்கிறார் போலும். இவ்வாறே ஐயா பல மாணவர்களின் கல்விக்கு வழிகாட்டியதன் மூலம் அவர்களை வாழ்வில் உயர்த்தி விட்டுள்ளார்.

ஐயாவின் மொத்த சேவைக்காலமான சுமார் 35 வருடங்களுள் 25 வருடங்கள் 09 மாதங்கள் நிலாவெளிப் பாடசாலையிலேயே சேவையாற்றியிருக்கிறார். இந்த கால் நூற்றாண்டு கால சேவைக்குள் நிலாவெளிக் கிராமத்தில் அநேகமான குடும்பங்களில் இரண்டு தலைமுறையினர் ஐயாவின் மாணாக்கர்களாய் இருந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் கிராமப்புறப் பாடசாலைகளில் உதவி ஆசிரியரை "ஐயா" என்றும் தலைமை ஆசிரியரைப் "பெரியையா" என்றும் அழைப்பது வழக்கமாயிருந்தது. இந்த இரண்டு தலைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் பாடசாலைக்காலம் முடிந்த பின்னும் பாடசாலைக்கு வெளியேயும் இவரைப் "பெரியையா" என்றே அழைக்கலாயினர். இவ்வாறாக **"பெரியையா"** ப்பெயர் ஊரிலே நிலைத்துவிட்டது.

## கல்விப் பணி

நிலாவெளி மெ.மி.த.க. பாடசாலையில் 05ம் வகுப்புப் பொறுப்பாசிரியராக இருந்த போது புலமைப் பரிசில் பரீட்சையில் 1954ம் ஆண்டில் 08 மாணவர்களும், 1955ல் தோற்றிய 16 மாணவர்களில் 14 மாணவர்களும் சித்தியடையச் செய்தார். இந்தச் சித்தியின் நூற்று வீதம் இன்றுவரை சிறந்த பெறுபேறாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அக் காலத்தில் இப் பரீட்சை 'வித்தியா அபிவிருத்திப் பணப் பரீட்சை' என வழங்கப்பட்டு வந்தது.

இவரது தலைமையாசிரியர் பதவிக் காலத்தில்தான் 1967 ம் ஆண்டில் இலங்கை அரசின் கல்வி அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்த மாண்புமிகு ஐ.எம்.ஆர்.ஏ. இரியகொல்ல அவர்கள் திருகோணமலை கல்வித் திணைக்களத்தின் அதிகாரியாகக் கடமையாற்றிக்கொண்டிருந்த பாமர் அம்மையாருடன் இப் பாடசாலைக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்று மேற்கொண்டவேளை பாடசாலைச் சமூகத்தினரின் கோரிக்கைக்கு இணங்கி இப் பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தி அதனைப் பாடசாலைச் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் தனது கைப்பட எழுதி உறுதிப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து இப் பாடசாலை தி/நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்று வழங்கப்பட்டது. *(இன்று நிலாவெளி கைலேஸ்வர கல்லூரி என வழங்கப்படுகிறது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப வாழ்க்கை

1939ம் ஆண்டில் நிலாவெளியைச் சேர்ந்த திரு. விசுவர் சபாபதிப்பிள்ளை என்பவரின் புதல்வி இலட்சுமிப்பிள்ளை என்பவரை மணம் முடித்து மேற்கொண்ட குடும்ப வாழ்க்கையின் பயனாக இராசநாயகி, சித்திரவேலாயுதன், மகேஸ்வரி, தவராசா மற்றும் தர்மகுலராசா ஆகியோரைக் குழந்தைச் செல்வங்களாகப் பெற்றெடுத்துப் பேணிவளர்த்துக் கற்றவர்களாக்கிப் பெருமைப்பட்டார். மனைவி திருமதி இலட்சுமிப்பிள்ளை சிறந்த இல்லத்தரசியாக வாழ்ந்து கணவருக்கும் பிள்ளைகளுக்கும் செய்யவேண்டிய சேவைகளச் செவ்வனே நிறைவேற்றிச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்து 21.11.2014ல் வானத்தவர்க்கு நல்விருந்தாகிவிட்டார். ஐயா அம்மா இருவரும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழக் கிடைத்தவர்கள்.


ஐயா கல்விப் பணியோடு மட்டும் நின்றுவிடாமல் இக் கிராமத்தில் சமயப்பணி சமூகப்பணி என்பவற்றிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர்.

ஐயா நிலாவெளியூர்ப் பிறந்த அபிமானி என்பதாலும் ஊரவர்கள் பெரியையாவின் அபிமானிகளாயிருந்ததாலும் ஊரில் உள்ள ஆலயங்களின் நிர்வாகத்துக்கும் பல்வேறு சங்கங்களின் செயற்பாட்டுக்கும் பெரியையாவையே தலைவராக்கினார்கள். அவரும் அப் பதவிகளைப் பொறுப்பேற்றுச் சிறப்புறப் பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியையா - தனது இளமைக் காலத்தில்



ஆசிரியராக
இருந்த காலத்தில்



அதிபராக
இருந்த காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமயப் பணி**

- நிலாவெளி சித்திவிநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றி 1972ம் ஆண்டில் ஆலய கும்பாபிஷேக விழாவினை ஊரவர்களுடன் முன்னின்று நிகழ்த்திவைத்தவர்.
- 1990ல் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் பல கோயில்களும் பூட்டப்பட்டுப் பூசைவழிபாடுகள் இன்றிக் காணப்பட்டன. நிலைமை ஓரளவு சீராகியதும் 1994ம் ஆண்டில் ஐயா ஊர் மக்களை ஒன்றிணைத்து நிலாவெளி சித்திவிநாயகர் ஆலயத்தில் திருத்த வேலைகளைச் செய்வித்துக் கோயிலில் மீண்டும் பூசை வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.
- 1996ம் ஆண்டில் மீண்டும் ஆலய பரிபாலன சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட காலத்தில்தான் 2002ல் இக் கோயில் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்.
- மேற்படி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத காலத்தின் போது கந்த புராணத்தின் சூரபன்மன வதைப் படலப் படிப்பின்போது 40, 50 ஆண்டுகளாகப் பயன் விரித்து வந்தார்.
- நிலாவெளி பத்தினியம்மன் ஆலயத்தில் வைகாசிப் பொங்கல் நடைபெறும் காலத்தில் "சிலம்பு கூறல்" என்னும் பெயரால் நடைபெற்ற ஏட்டுச் சுவடியில் செய்யுள் வடிவிலுள்ள கோவலன் கண்ணகி கதை படிப்பதிலும் ஈடுபட்டு வருங்கால சந்ததியினர் ஏட்டெழுத்துப் படித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதனை உணர்ந்து அச் செய்யுள்களைப் புத்தக எழுத்து வடிவத்துக்கு மாற்றி எழுதி உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப்பணி

பல்வேறு சமூக அமைப்புகளில் காலத்துக்குக் காலம் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து கிராமத்து வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். கிராம முன்னேற்றச் சங்கம், கிராமோதய சபை, ஐக்கிய நாணய சங்கம், மக்கள் குழு போன்ற சமூக அமைப்புக்களில் பல்வேறு நிர்வாகப் பதவிகளை வகித்து நிலாவெளி கிராமத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டார்.

## விவசாயச் செய்கையில் ஈடுபாடு

ஆசிரியத் தொழிலைப் பிரதானமாக மேற்கொண்ட போதும் நெற்பயிர்ச் செய்கை, உப்பளச் செய்கையிலும் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டார். புதுவெளி என்றழைக்கப்படும் வயல் வெளியில் கோடைப் போகம் மாரிப்போகம் என இரண்டு காலத்தின் போதும், உப்பளப் பகுதியில் கரைச்சி வயல் என அழைக்கப்படும் பகுதியில் மாரிப்போகத்திலும் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போது ஆசிரியர் என்னும் வகிபங்கிலிருத்து விடுபட்டு முழுமையான கமக்காரனாக மாறி சாரன் ஷேட் அணிந்து தலைப்பாகையும் கட்டி மாட்டு வண்டிலில் ஏறிப் போகும் போதும் களத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்து வேலை செய்யும் போதும் ஒரு விவசாயியாக ஐயாவினை கண்டறிந்ததுண்டு. தாள்கத்தி பிடித்து வேளாண்மை வெட்டுதல், உப்பட்டி சுமத்தல், சூடு வைத்தல், சூடடிக்கும் போது சூட்டுக்களத்தில் வெண்கட்டி பிடிக்கும் கையால் வேலைகாரன் கம்பு பிடித்துப் பொலிக்கொடி ஒதுக்கிப் பொலிசேர்த்துக் காற்றில் தூற்றி சாக்குகளில் நிரப்பி வண்டிலில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வருதல், மறுநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கோல் கற்றைகளை வண்டிலில் ஏற்றிக்கொண்டு வந்து வீட்டுவளவில் மாட்டுத் தொழுவத்துக்கு அருகில் கும்பி போடுதல் ஆகிய இத்தனை வேலைகளையும் மாமனாரின் வழிகாட்டலுடனும் மைத்துனரின் ஒத்துழைப்புடனும் செய்வதனை எனது சிறு பராயத்தினில் கண்டறிந்ததுண்டு.

## வரலாற்று நூல் வெளியீடு

ஐயா அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு 15.03.2014ல் நிலாவெளிக் கிராம மக்கள் அவருக்கு விழா ஒழுங்கு செய்த போது ஐயா எழுதிய "நிலாவெளி வரலாறும் பண்பாடும்" என்ற நூலும் வெளியிடப்பட்டது. இந் நூல் இக் கிராமத்தின் தொன்மை, தொழில் வளம், கல்வி, வழிபாட்டுத் தலங்கள் எனப் பல்துறைகளிலும் இன்றைய சந்ததியினர் இதுவரை அறிந்திராத அறிந்திருக்கவேண்டிய பல விடயங்களை வெளிக்கொண்டு வந்துள்ள ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாகும்.

## பலரும் வியந்த ஞாபக சக்தி

பொதுவாக ஒருவர் முதுமை அடைய அடைய ஞாபக சக்கியும் குறைந்து குறைந்து போவதைக் கண்டிருப்போம். ஆனால் ஐயாவைப் பொறுத்தமட்டில் அவர் 106ம் வயதிலும் இந்த இயற்கை நியதிக்கு விதிவிலக்காகவே காணப்பட்டார். பல வருடங்களின் பின் ஐயாவைப் பார்க்கவருபவர்கள், குறிப்பாக வெளிநாட்டில் நீண்ட காலம் வாழ்ந்துவிட்டு வருபவர்கள் வழமையான பீடிகையில் "ஐயாவுக்கு என்னைத் தெரியுதோ" என்று கேட்டு எதிர்மறை விடையை எதிர்பார்த்திருக்கும் போதே ஐயா, "நீங்கள் இன்னாருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் இன்னார் தானே" என்று வந்தவரின் தகப்பன் பெயரையும் சொல்லி வந்தவரின் பெயரையும் சரியாகச் சொன்னதும் வந்தவர் வியந்து விடுவார். அது மட்டுமல்ல எம்மோடும் பிறரோடும் பொது விடயங்கள் பற்றி உரையாடும் போது ஏதேனும் உதாரணம் காட்டுவதற்கு இராமாயணம், பாரதம் மற்றும் நீதி நூல்கள் போன்ற பண்டைய இலக்கியங்களிலிருந்து பாடல்களைத் தங்குதடையின்றி முழுமையாகப் பாடிக்காட்டிப் பொருள் விளக்குவார். அதுபோல தன் இறுதிக்காலம் வரையும் தேவார திருவாசகம், கந்தர லங்காரம், கந்தரனுபூதி மற்றும் சமய இலக்கியங்களில் வரும் பாடல்களைத் தேவை கருதிப் பாடிக்காட்டுவார். 05.02.2021ல் ஐயாவின் மறைவுக்கு ஒரு வாரத்தின் முன்னர் கூட, பவானியர் என்றழைக்கப்படும் திரு.க.இ.சின்னத்துரை அவர்கள் அண்மையில் கனடாவில் காலமான போது அவரது நினைவஞ்சலி நூலுக்கு ஐயாவிடமிருந்து ஒரு செய்தி கோரியிருந்தார்கள். ஐயா எதுவித தயக்கமும் இன்றி அவர் பற்றிய ஆதி விபரங்களை மறக்காமல் சொல்லச் சொல்ல தம்பி தவராசா எழுதி முடிக்க கீழே ஐயா தானே கையொப்பம் இட்டுக் கனடாவுக்கு அனுப்பப்பட்டது.

## பொதுவானவை

உடல் நோய் மன நோய் உள்ளவர்களுக்குத் திருநீறு போடுதல், தண்ணீர ஓதிக் கொடுத்தல், மற்றும் அடிப்படைச் சோதிட அறிவு பெற்றிருந்ததால் உறவினர் நண்பர்கள் கேட்டு வரும் போது பஞ்சாங்கம் பார்த்து வீட்டுக்கு நிலையம் எடுத்தல், சுபகருமங்களுக்கு நாள் நேரம் எடுத்துக் கொடுத்தல், மற்றும் திருமணப் பொருத்தம் போன்றனவும் பார்ப்பார். அதுமட்டுமன்றி வீட்டில் துவிச்சக்கரவண்டி உதிரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் கழற்றி திருத்துவார். எமது பட்டியிலுள்ள காளை மாடுகளை வண்டிலுக்கு பழக்கி எடுப்பார். இவ்வாறு ஐயாவின் பல்திறனையும் கண்டு களித்திருந்தோம். ஆங்கிலத்திலே ஒரு முதுமொழி படித்திருந்தேன். "Everybody must know Something of Everything and Everything of Something" அதாவது "ஒருவன் ஒவ்வொரு விடயத்தைப்பற்றியும் சிறிதளவேனும் ஏதோ ஒரு விடயத்தைப் பற்றி முழுமையாகவும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்" என்பதாகும். ஐயாவைப் பொறுத்தமட்டில் இக் கூற்றுப்படியே வாழ்ந்திருக்கிறார்.

1990ல் திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பாலான கிராமப் பகுதிகளில் இடம்பெற்ற கலவர சூழ்நிலை காரணமாகப் பலரும் இடம்பெயர்ந்த போது ஐயாவும் அம்மாவும் 1990 முதல் 2004 வரை திருகோணமலை நகரில் எனது குடும்பத்துடன் வசித்தார்கள். பின்னர் 2005ம் ஆண்டிலிருந்து 2009 வரை மூத்த மகள் திருமதி தில்லையம்பலம் இராசநாயகியுடன் இருபாலையில் வசித்தார்கள். பின்னர் 2010 முதல் மீண்டும் இருவரும் திருமலை நகரில் வசித்தார்கள். இடையிடை நிலாவெளியிலும் பெறாமகள், பேரப்பிள்ளைகளுடனும் வாழ்ந்து மகிழ்ந்திருந்தார்கள். பின்னர் அம்மாவை அக்கா வந்து கூட்டிப்போய் இருபாலையில் இருக்க ஐயா மட்டும் இங்கிருந்து தனது நூறாவது பிறந்த நாள் விழாவை 15.03.2014 ல் கொண்டாடிவிட்டு அம்மாவின் அடிக்கடி அழைப்பின் காரணமாக ஐயாவும் 30.03.2014ல் இருபாலையில் போய் இருவரும் ஒன்றாக வாழ்ந்த காலப்பகுதியில் 21.11.2014ல் அம்மா காலமாகிவிட ஐயா மீண்டும் திருமலை நகரில் வந்து 2016 வரை என்னுடன் இருந்தவேளை, தம்பி தவராசா வந்து ஐயா தங்களுடனும் சில காலம் இருக்கவேண்டும் என்று தாங்கள் விரும்புவதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற, ஐயாவும் உடன்பட்டு 2016 வைகாசி முதல் இறுதிக் காலம் வரை இணுவிலில் மகன் தவராசாவின் குடும்பத்துடன் வாழ்ந்தவர். உண்மையில் இந்தக் காலகட்டத்தில்தான் அவருக்குக் கூடுதலான பராமரிப்புத் தேவைப்பட்டது. அவற்றைத் தவராசா குடும்பத்தினர் குறைவின்றி நிறைவேற்றி வைத்தார்கள்.

ஐயாவின் காலைக்கடன் குளிப்பு முழுக்கு உடைகள் அலம்புதல் போன்ற சேவைகளுக்காக உரும்பிராயில் வசிக்கும் திரு.க.பன்னீர்ச்செல்வம் என்பவரை ஒழுங்குசெய்து அவரின் உதவியைப் பெற்றிருந்தோம். அவரும் தினமும் காலை மாலையில் வந்து ஐயாவின் மீது அன்போடும் பண்போடும் மனம் வைத்துத் தன் சேவையை நிறைவேற்றி வைப்பார். அதனை எம்மால் மறக்கமுடியாது.

ஐயா எமக்கெல்லாம் பெரிய பொக்கிஷமாக 106 வயதையும் கடந்து வாழ்ந்து இப்போ பிரிந்தது கவலை அளிப்பதாயிருப்பினும் மானிட வாழ்க்கையின் நியதியை மாற்ற முடியாதென்பதை உணர்ந்து மன ஆறுதலடைந்து ஐயாவின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அவர் வரலாற்றை நிறைவு செய்கிறேன்.

**கெஜரெத்தினம் சித்திரவேலாயுதன்.**
**57, ஹஸ்கிசன் வீதி,**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதாகமமாமணி"
சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
சமாதான நீதவான்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
(பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்)
திருக்கோணமலை

தொ.பே. 026 - 2222760
026 - 2224680

websit: www.trincopathirakali.com



"VERHAKAMAMAMANI"
Siva sri.S.Ravichchandira kurukkal
JUSTICE OF THE PEACE (J.P)
SRI PATHIRAKALIAMBAL THEVASTHANAM
(Chief Incumbent & Chief Priest)
Trincomalee

.....15../ ....03..../ 20....21...

# நினைவில் நீங்காதவர்

"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" எனத் தேவாரப் பாடல் பெற்ற திருகோணமலை மாவட்டத்தில் நான் அறிந்தவரை 106 வயதுக்கு மேல் வாழ்ந்த ஒரு பெரியார் என்றால் அது திரு.கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்களேதான். அன்னார் கடந்த 13.02.2021ல் மறைந்துவிட்டார் என்ற துயரச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரம் அடைந்தேன்.

திருகோணமலை மாவட்டத்தின் எழில் மிக்க, வளம் மிக்க நிலாவெளிக் கிராமத்தில் தனது வாழ்நாளைக் கல்விப் பணிக்கும், சமயப் பணிக்கும், சமூகப் பணிக்கும் அர்ப்பணித்த ஒரு பெரியார் திரு.கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்கள் இன்று நம்மை விட்டுப் பிரிந்தமை இப் பகுதிவாழ் மக்கள் அனைவருக்கும் மாறாத மனக்கவலை.

இப் பெரியார் திருமலை நகரம், சாம்பல்தீவு, நிலாவெளி மற்றும் கும்புறுபிட்டிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றிப் பல மாணாக்கர்களைக் கல்வியில் முன்னேற்றிச் சமூகத்தில் உயர்ந்த நிலையில் வாழ வழிவகுத்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவெளி சித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையில் நீண்டகாலம் தலைவராக இருந்து ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியவர். 1972ம் ஆண்டிலும் பின்னர் 2002ம் ஆண்டிலும் அவ் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேக கைங்கரியங்களின் போது பரிபாலன சபைத் தலைவர் என்ற ரீதியில் தான் செய்ய வேண்டிய பங்களிப்பைச் செவ்வனே நிறைவேற்றியவர். 2002ம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை அங்கு சென்று நடாத்தி வைக்கும் பாக்கியத்தைச் சித்தி விநாயகப் பெருமான் எனக்குத் தந்திருந்த போது என் பணியைச் செவ்வனே செய்வதற்கு அப்போது தலைவராயிருந்த பெரியார் திரு.கெஜரெத்தினம் அவர்கள் எனக்கு அளித்த முழு ஒத்துழைப்பையும் கௌரவத்தையும் இன்றும் என்னால் மறக்க முடியாது.

அன்னார் நிலாவெளி சித்தி விநாயகர் ஆலயத்தில் 40-50 ஆண்டுகளுக்கு மேலாகக் கந்தசஷ்டி விரதகாலத்தின் போது கந்தபுராணத்துக்குப் பயன் சொல்லி வந்தமையும் நான் அறிவேன். இவ் ஆலயம் மட்டுமன்றி அங்குள்ள முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் பத்தினியம்மன் ஆலயங்களிலும் தொண்டாற்றியவர்.

நான் சிறுபராயமாக இருந்த காலத்திலேயே இவரது தாயார் திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு வந்து தங்கி நின்று வழிபட்டுச் செல்வது எனக்கு ஞாபகம் உண்டு. அக் காலம் தொட்டு இப் பெரியாரின் குடும்பத்தினரை நான் நன்கு அறிவேன்.

தன் வாழ்நாளைக் கல்விப் பணிக்கும்,சமயப் பணிக்கும் சமூகப்பணிக்கும் அர்ப்பணித்து எல்லோருக்கும் நல்லதே செய்து அறநெறியில் வாழ்ந்த இப் பெரியார் திரு.கயிலாயபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஜரெத்தினம் அவர்கள் பல்லோரும் பணிந்து ஏத்தச் சிவபுரத்துள் சிவனடிக் கீழ் செல்வார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இவ் உலகத்தை விட்டு அவர் நீங்கினாலும் எங்கள் நினைவை விட்டு அவர் நீங்கமாட்டார்.

அன்னாரின் பிள்ளைகள் உறவினர்கள் இவ்வேளையில் இயற்கையின் நியதியை உணர்ந்து பிரிவுத் துயர் மறந்து ஆறுதலடைய எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளை வேண்டி நிறைவு செய்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வேதாகமாமணி
பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள்
ஆலய ஆதீனகர்த்தா
ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

பதிவிலக்கம்:- HA/5/JA/193

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com Fax:- 021 2241909

திகதி 15.03.2021


# செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனையுரை

தொன்மை வரலாறு கொண்ட நிலாவெளியில், 15-03-1914இல் பிறந்தவர் உயர்திரு.க.கெஜரெத்தினம் அவர்கள். மன்னன் குளக்கோட்டனால் நிலாவெளியில் குடியேற்றப்பட்ட கனகசுந்தரப்பெருமாளின் வழித்தோன்றலில் தோன்றிய இப்பெரியாரின் பெருமைகளை யாவரும் அறிவர். நூற்றியேழு வயது வரை வாழ்ந்த இப் பெருமகனின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றேன். கடவுள் பக்தியும், தமிழறிவும் மிக்க இப் பெருமகனார் தன் வாழ்வில் சாதித்தவை ஏராளம். ஆசிரியராக, அதிபராக, புராணபடன வித்தகராக, சமூக சேவையாளராக எம் மத்தியில் வாழ்ந்து பெருமை பெற்றவர்.

கந்தபுராணப் படிப்பில் மிகுந்த பாண்டித்தியம் மிக்க இப் பெரியவர், தனது உயிர் பிரியும் வரை புராணப் படிப்பில் கலந்து கொண்ட சாதனையாளர். நிலாவெளி முதல் இணுவில் வரை இவரது சமயப் பணி தொடர்ந்தமை பெருமைக்குரிய விடயமாகும். அன்னாரின் பிள்ளைகள், மருமக்கள் தெய்வ பக்தியோடு தந்தை வழியில் இன்று தொண்டாற்றி வருகிறார்கள். அன்னாரின் மைந்தன் திருமிகு. தவராஜா அவர்கள் இசைஞானம் நிறைந்தவர். தலங்கள் தோறும் தந்தையின் பாதையில் திருமுறைகளைப் பாடி வருகிறார். அன்னாரின் பிரியபத்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் 21.11.2014இல் தனது எண்பத்தொன்பதாவது வயதில் இறையடியில் ஆறுதல் பெற்றவர். குடும்பமே தெய்வீகமாக நிலைப்பதற்கு வித்திட்ட ஆசிரியபிரானின் ஆத்மா கோணேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் ஆறுதல் பெறப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,**
**நிலாவெளி, திருக்கோணமலை.**

## கஜமுகனின் பாதம் சென்றார்
## கெஜரெத்தினம் என்னும் சான்றோன்

திருக்கோணமலை நிலாவெளியில் அவதரித்து, நிலாவெளி ஊருக்கும், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கும் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து சேவை செய்த எங்கள் பெரிய வாத்தியார் என்னும் பேராளன் இவ்வுலகில், தான் செய்த சேவை போதும், இனி அவ்வுலகம் சென்று சேவை செய்ய சென்றார் எனலாம். அன்னாரது ஆத்மா சித்தி விநாயகரது பாதாரவிந்தங்களில் அமைதி பெற்றுய்யும் என்பதில் ஐயமில்லை. அன்னாரது ஆத்மசாந்திக்காக நாமனைவரும் பிரார்த்திப்போமாக. அன்னாரது குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சித்திவிநாயகரது பேரருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"சர்வே ஜனாக சுகினோ பவந்து"

என்றும் இறைபணியில்
சிவஸ்ரீ S.தாண்டவநாத குருக்கள்
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
நிலாவெளி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002ம் ஆண்டு நிலாவெளி சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தில் கௌரவிக்கும் போது





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மந்திர கிரியா சுரபி" சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் J.P
அகில இலங்கை சமாதான நீதிவான்
பிரதம குரு : ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் (தாவடி)
விசேட குரு : ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் (மருதனார்மடம்)
உற்சவ குரு : ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலயம் ( காரைக்கால்)

"Bhava Nivasam"
Karaikkal Road,
Inuvil East,
Chunnakam, SriLanka.
0094 21224 1781

"பவ நிவாசம்"
காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.
0094 776935311

# புகழ் பூத்த புண்ணியர்

புராணீகர் திருவாளர் க.கெஜரெத்தினம் அவர்களுடைய மறைவு அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்தி இருக்கின்றது. தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்த சிலரில் திரு.க.கெஜரெத்தினமும் ஒருவர்.

அதிபர் என்கின்ற பொறுப்பான அரச பதவியோடு சமூகப் பணியின் சுமையோடு தன் ஆன்மீகப் பணியையும் முன்னெடுத்துச் சென்ற ஒருவர். தனது 35ஆவது வயதளவிலேயே திருமுறைப் பாராயண முற்றோதல் நிகழ்வுகளிலும், புராணபடன நிகழ்வுகளிலும் பங்குபற்றித் தன் 'கணீர்' என்ற குரலால் சபையை வசீகரித்து ஆட்கொண்டவர். அதிலும் சிறப்பாக இயல்பான தெய்வீக அனுக்கிரகத்தோடு அனுபவமும் இணைந்து கொள்ள 1952 ஆம் ஆண்டிலிருந்து புராணத்துக்குப் பயன் (உரை) சொல்லும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தவர்.

திருக்கோணமலை, நிலாவெளி, இணுவில் போன்ற இடங்களில் பற்பல ஆலயங்களில் தன் இறைபாடும் பணியை ஆற்றிய பெருந்தகை. நான் அவரை இணுவில் மஞ்சத்தடி முருகன் கோவிலிலே 2005ஆம் ஆண்டு கந்தசஷ்டி விழாவின் போது சந்திக்க நேர்ந்தது. ஆழமான கல்வியறிவு, அசையாத இறை நம்பிக்கை, நேரான வாழ்க்கைநெறி, சீரான உடை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோருக்கு விடயங்களை எடுத்தியம்பும் பாங்கு, பணிவு, பக்தி என அவர் ஒரு நடமாடும் பல்கலை மேதை போலத் திகழ்ந்தார். புன்முறுவல் பூத்த முகத்தோடு அவர் என்னோடு உரையாடியது என் மனதில் இன்றும் நிழலாடுகின்றது.

'கெஜம்' என்றால் யானை, 'ரெத்தினம்' என்றால் முத்து. நன்றாகப் பெருத்து வளர்ந்து விளைந்த யானையின் தந்தத்தின் உள்ளே உருண்டு திரண்டு முத்தாக அசைந்து செல்வதே கெஜரெத்தினம் எனும் முத்து. இது அபூர்வமானது. அதே போல புராணீகர் அவர்களும் வயதிலும் அனுபவத்திலும் முத்தாகத் திகழ்ந்தவர். 15.03.1914ஆம் ஆண்டு அவதரித்த கெஜரெத்தினம் அவர்கள் 106 வருடங்கள் நிறைவாக வாழ்ந்திருக்கின்றார். 100 வயதிலே பூர்ணாபிஷேகம் கண்டுவிட்டால் அவர் தேவருக்கு ஒப்பாகிறார் எனச் சாஸ்திரங்கள் செப்புகின்றன. இப்படிச் சிறப்புக்கள் பெற்ற பெரியார் அவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய புருஷார்த்தங்களை எம் முன் பிரத்தியக்ஷமாகப் பெற்றவர். நான்காவதான வீடு ஆகிய முத்திப் பேற்றையும் பெறுவது திண்ணம்.

**"தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்."**

என்பதற்கிணங்க அவர்தம் புதல்வர்கள் தந்தையாரின் பணியைத் தொடர்வது கண்கூடு.

இறைவரம், நாடகக் கலைஞர்கள் வீ.எம்.சுப்பையா, வீ.எம்.நாகலிங்கம் ஆகியோரைத் தாய்மாமனார்களாகப் பெற்ற சிறப்பு, கல்வி, ஆற்றல், ஆளுமை, இரக்கம், எளிமை வாழ்வு என அவரின் சிறப்புகள் அவர்தம் வாழ்வை எல்லோர் முன்னிலையிலும் உயர்த்தி வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்."**

எல்லாச் சிறப்புக்களோடும் வாழ்ந்த பெருமகனாரின் வாழ்வு எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழ்வதோடு அவரின் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும் .

அன்பே சிவம்

இங்ஙனம்

கு.சரவணபவக் குருக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பர் திரு.க.கெஜரெத்தினம் மாஸ்டர் அவர்களின் நினைவாக

அமரர் கயிலாயப்பிள்ளை கெஜரெத்தினம் மாஸ்டர் அவர்களின் நினைவு மலரில் அவரைப் பற்றிய சில நினைவுகளைக் குறிப்பிடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இவர் இணுவிலைப் பூர்வீக இடமாகக் கொண்டவர். திருகோணமலை நிலாவெளியில் பிறந்து வளர்ந்தவர். நிலாவெளி பிள்ளையார் கோவில் மாரியம்மன் கோவில்களின் தலைவராக நீண்டகாலம் தொண்டு செய்தவர். 1972 ஆம் ஆண்டு நிலாவெளி பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது நானும் சென்றிருந்தேன். இவர்தான் தலைவராக இருந்து மிகவும் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர்.

இணுவிலில் இவரது மகன் தவராசா அவர்களின் வீட்டுக்கு வந்திருந்த காலத்தில் மஞ்சத்தடி முருகன் கோவிலில் கந்தசஷ்டி விழாவின் போது கந்த புராணத்துக்கு பயன் சொல்லி வந்த போது தான் இவர் இணுவிலில் புகழ் பூத்த சுப்பையா, நாகலிங்கம் ஆகிய நாடகக் கலைஞர்களின் சகோதரியின் மகன் என அறிந்தேன்.

மஞ்சத்தடி முருகன் கோவிலில் பல வருடங்களாக கந்தபுராண பயன் சொன்னவர். மிக மிக அருமையாக சொல்வார். 2016 ஆம் ஆண்டு கந்தசஷ்டியின் போது தனது 102 ஆவது வயதில் வந்திருந்து பயன் சொன்னவர். 2018 ஆம் ஆண்டு இவர் தனது 104 ஆவது வயதிலும் ஒரு நாள் வந்து பயன் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்து ஒரு தொய்வும் இல்லாமல் நன்றாகப் பயன் சொன்னவர். இவரைப் போன்று பயன் சொல்பவர்கள் அரிதாகி விட்டார்கள். இவருக்கு நான் மாலை சூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளாஞ்சியும் கொடுத்து "வேலும் ஒன்று கொடுத்தால் முருகன் தான்" என்று கூறினேன். அவர் சிரித்த சிரிப்பு இன்றும் கண் முன்னே தெரிகிறது.

இவரது ஆத்மா சாந்தியடையும் என்பதில் சந்தேகமில்லை. அவரது கந்தபுராணத் தொண்டினை இவரது சந்ததியினரும் தொடர வேண்டும். கந்தபுராணம் படிப்பதும் பயன் சொல்வதும் அருகிக் கொண்டு போகிறது. இவரது வழியில் இளம் சமுதாயத்தினர் இவரது சேவையைத் தொடர வேண்டும். இதுவே இவரது சேவைக்கு நாம் செய்யும் கைமாறாக அமையும்.

மா. கிருஷ்ணமூர்த்தி ஐயர்.
**இணுவில் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய கோவில்**
**(இணுவில் மஞ்சத்தடி முருகன் கோவில்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
*பாராளுமன்றம்*
**PARLIAMENT**

அமரர் திரு. கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்களின் மறைவு குறித்துத் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைப் பாராளுமன்ற முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள்வழங்கிய அனுதாபச் செய்தி

திரு கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்கள் திருக்கோணமலை மாவட்ட மண்ணிலே 106 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து 2021.02.13 ம் திகதி மறைந்துவிட்டார் என்ற செய்தி என் மனதை மிகவும் வாட்டியது.

அன்னார் திருகோணமலை கட்டுக்குளப் பற்று கிழக்குப் பகுதியில் வளம் பல நிறைந்த நிலாவெளிக் கிராமத்தில் பல்துறை வளவாளராகக் கல்விப் பணி, சமயப் பணி மற்றும் சமூகப்பணிகளில் அயராது தன்னை ஈடுபடுத்திகொண்ட ஒருவராவார்.

சாம்பல்தீவு, நிலாவெளி மற்றும் கும்புறுபிட்டிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தனது அர்ப்பணிப்பான சேவையினாலும் முன்னுதாரணத்தினாலும் அப் பகுதி மாணவர்களுக்குக் கல்வியுடன் நல்ல அறநெறி ஒழுக்கங்களையும் ஒருங்கே ஊட்டி நல்ல எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

தனது சொந்த ஊரான நிலாவெளி ஆலயங்களில் தொண்டாற்றியதுடன் மட்டுமன்றி திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வருடாந்த மஹோற்ஸவத்தின் பத்தாம் நாள் உபயமான கட்டுக்குளப்பற்று கிழக்கு சைவ அன்பர்களின் திருவிழாவை நிலாவெளி முதல் திரியாய் வரை வாழ்ந்த மக்களின் உயர்ந்த மதிப்பினைப் பெற்ற அவரே தர்ப்பை அணிந்து சங்கல்பித்து பல வருடங்களாக அப் பகுதி மக்களின் ஒத்துழைப்புடன் முன்னின்று நடத்தி வந்தமையையும் நான் அறிவேன்.

பல தேவைகளை முன்னிட்டு நாங்கள் நிலாவெளிப் பகுதிக்குச் சென்றுவரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இப் பெரியார் எம்மை இன்முகம் காட்டி வரவேற்று எங்கள் தேவைகளை நிறைவேற்றி வருவதற்கு எங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவந்ததை எம்மால் மறக்கமுடியாது.


அன்னாரது பிரிவினால் துயர் அடைந்திருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல கோணேசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

இரா. சம்பந்தன்

இரா சம்பந்தன்
திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும்
இலங்கைப் பாராளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியய்யா – வாசிக்கப்படாத ஒரு பேரிலக்கியம்

'பெரியய்யா' என்ற ஒற்றைச் சொல்லால் ஊர்கூடிக் கொண்டாடிய ஒரு பேராசானை சொற்களால் மீட்டெடுக்கும் துயரமான தருணம் இது. நினைவு கொள்ளல் என்பது ஒருவருடைய ஆளுமையின் நீட்சியை அடுத்த தலைமுறையுடன் இணைக்கும் உலகமரபு. இதற்காகவே இழந்தவரை சொற்களினால் மீட்டெடுத்து மீண்டும், மீண்டும் நினைவிற் கொள்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களின் இறப்பு என்பது மறைவே. நினைக்கப்படும் வரை அவர்கள் மீண்டும், மீண்டும் உயிர் பெறுகின்றார்கள்.

எப்போதும் மனம் ஒரு தேடலை நிகழ்த்திக் கொண்டே இருக்கும். சில பண்புகள் அருகிவிட்டதாக மனம் சஞ்சலப்படும். அந்த ஆளுமைகள் கண்களில் படும் போது மனதில் ஈர்ப்பு நிகழ்ந்து விடுகின்றது. அத்தகையதொரு ஈர்ப்புத்தான் பெரியய்யாவுடனான என் நெருக்கம். இளமைப் பருவத்தைக் கடந்த தறுவாயில் உருவாகும் வெறுமை ஒன்றுண்டு. பொதுவாக அது முதுமையின் அவஸ்தைகளோடு கூடியது. கையறு நிலையின் இயல்பான சோர்வுகளின் போது அது பேருருக்கொள்ளும். அதனால் பெரியய்யாவுடனான சந்திப்பில் உடல் நலம் விசாரிப்பதைத் தவிர்த்து விடுவேன். அது முதுமையின் தீராவலிகளை மேலும் நினைவூட்டிவிடும். நேரடியாக கடந்தகால நினைவுக்குள் அவரை இழுத்துவிட்டால் இலக்கியத்துக்குள் அவர் மூழ்கிவிடுவார்.

அநேகமான சந்திப்புக்களில் கோணேசர் கல்வெட்டு பேசும் பொருளாக வந்துவிடும். அதற்கு இரு காரணங்கள் எனக்குள் இருந்தன. நிலாவெளி குறித்து கோணேசர் கல்வெட்டு அதிகம் கூறுகின்றது. அது நிலாவெளிக்கு இந்துவெளி என்ற ஒரு மறுபெயரைத் தருகின்றது. அதிலும், பூபாளக்கட்டில் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசுந்தரப்பெருமாள் பரம்பரையே கோணேசர் ஆலயத்தை நிர்வகிக்க குளக்கோட்டானால் நியமிக்கப்பட்டவர்கள். அடுத்து, திருகோணமலை என்ற பெயரை வெளிப்படுத்தும் கல்வெட்டுச்சாசனமும் நிலாவெளிக்கு உரியது. இதன் காலம் கி.பி 7- 8ம் நூற்றாண்டுக்குரியது. இலங்கையில் வேறு எந்த ஊர்களின் பெயர்களுக்கும் இத்தகைய தொன்மையான வரலாற்று சான்றுகள் கொண்டவை அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. இவையெல்லாவற்றையும் பேசக்கூடிய ஆளுமை 'பெரியய்யாவிடம்' மாத்திரமே இருந்தது. வரலாறு, மொழி, தொல்லிலக்கியம் என அவரது உரையாடல் மிகவும் சுவாரஸ்யமானது. அவரது தொல்லிலக்கிய அறிவு மிக விசாலமானது. பொதுவாக அவருடைய வாழ்க்கைக்காலம் மரபுசார்ந்த இலக்கியச் சிந்தனைகளால் புனையப்பட்டிருந்தது. திருகோணமலை குறித்தெழுந்த வாயு புராணம், தட்சண கைலாசபுராணம், குளக்கோட்டன் கல்வெட்டு ஆகியனவற்றில் அவருக்கு இருந்த அறிவு மிகக்கூர்மையானவை. இவையே இலங்கையில் வெளிவந்த காலத்தால் முந்திய தொல்லிலக்கியங்களில் இன்று கிடைப்பவை.

பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குரியது எனக் கருதப்படும் கோணேசர் கல்வெட்டில் அவருக்கிருந்த நினைவாற்றல் ஆச்சரியத்திற்குரியது. இன்று திருக்கோணேஸ்வர நடைமுறைகளை விபரிக்கும் பெரிய வளமைப்பத்தி ஏடுகள் முற்றாக அழிந்துவிட்டது. அது பன்னிரண்டாம் நூற்றாண்டில் வெளியான கோணேசர் கல்வெட்டின் மூலநூலாகும். இதுவே இலங்கையில் உருவான இலக்கியங்களில் மிகத் தொன்மையானது. இந்த ஏடுகளை கற்றறிந்து நம் கண்முன் வாழ்ந்தவர் என்ற சிறப்பு பெரியய்யாவிற்கு மட்டும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிராஜவரோதயனை பேசும் போதெல்லாம் அவரது உடல்மொழி மாறிவிடும், வலிகள் மறந்து போய்விடும். சில நொடிக்குள் அவர் ஆசிரியராக மாறிவிடுவார். அற்புதம் நிகழத் தொடங்கும். அவரைப் பொறுத்தவரை கோணேசர் கல்வெட்டை எழுதிய கவிராஜவரோதயன் ஒரு ரிஷி. ஒரு கம்பன். மானுடப்புலவர்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் கொண்டவர். கம்பர், வள்ளுவர், பாரதியார் எனப் பேசுகின்ற போதெல்லாம் அந்தப்பேச்சின் அந்தாதியாக வருவது கோணேசர் கல்வெட்டுத்தான். அவர் மனம் அதில் ஆழ்ந்து லயித்துப் போய்விடும். கோணேசர் கல்வெட்டின் சொற்கள், வரிகள் தவறாது 52 பாடல்களையும் சொல்லுகின்ற புலமை அவரிடமே இருந்தது என்பதை விட அவரிடம் மட்டுமே இருந்தது. அது ஒரு மரபார்ந்த மனநிலையில் அவர் கண்டடைந்த உச்சம். இந்த உற்சாக உரையாடல் நிகழும் போது அவர் நூறு ஆண்டுகளைக் கடந்திருந்தார். ஆனால் பேசப்பேச நினைவுகள் பெருகின. அவர் மரபு இலக்கியங்களை நினைவுச் சுழற்சியில் இருந்து மீட்டெடுத்து முன்வைக்கும் முறை, அவருடைய கருத்துப்பரிணாமம் என்பன உரையாடலில் பெருகிச் சென்றது. முதுமை அவரது சிந்தனை ஓட்டத்தை நிறுத்தவில்லை.

கல்வெட்டில் 1887 இல் 55 பாடல்களும், 1916 இல் 58 பாடலாகவும், 1950 இல் 60 பாடலாகவும் பதிக்கப்பட்டதால் இந்த எண்ணிக்கை வேறுபாடுகளை நினைவுபடுத்திய போது. சலனமில்லாமல் "அந்தப்பாடல்களா" என கேட்டுவிட்டு இலக்கண குறிப்புக்கள், சொல்லாட்சி இரண்டையும் பேசத் தொடங்கினார். தன் சந்தேகங்களை சலிப்போடு பேசுவார். உற்சாகமான உரையாடல்காரர். மீண்டும் மீண்டும் அவர் சொல்லும் இந்த ஐயங்கள் கோணேசர் கல்வெட்டின் விரிவை உணர்ந்தவர்களால் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூற்றாண்டு காலத்தை நினைவில் ஏற்றி அதன் போக்குகளை மதிப்பிடுவது ஒரு சில மனிதர்களுக்கு மிக அபூர்வமாக கிடைக்கும் வரம். அவர்தன் நூற்றாண்டு நிறைவில் எழுதிய 'நிலாவெளி வரலாறும் பண்பாடும்' மிக நம்பகமான வரலாற்றுச் சான்று. ஒரு முறை பிரிட்டிஸ் ஆட்சி குறித்து பேச்சு எழுந்தது. நிகழ்கால அரசியல் சலிப்பு பெருமூச்சில் தெரிந்தது. அவை ஈழமனிதர்களுக்கான தேசியச் சலிப்பு. மெல்லிய ஏளனத்துடன் தொடர்ந்தார். "நல்லாட்சி நடக்கிற நாட்டில், மக்களுக்கு உயிர் கொடுப்பது 'நெல்லுமில்ல, நீருமில்ல', மன்னனின் அரவணைப்புத்தான்". வார்த்தைகளை நிதானமாக நிறுத்தியவர் தொடர்ந்து பாடத் தொடங்கினார்.

'நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தேமலர் தலை உலகம்
அதனால் யான் உயிர் என்பது அறிகை
வேல்மிகுதானை வேந்தற்குக்கடனே' என்றார்.

அவரது நினைவுச் சுழற்சி கேட்போருக்கு பிரமிப்பளிக்கும். இந்தப் பாடலுக்குரியவர் 'மோசிகீரனார்' என பின்பு தேடித் தெரிந்து கொண்டேன். புத்தகங்களை வாசிக்காதவர்களுக்கு பெரியவர்களோடு அமர்ந்து பேசுவது அறிவை வசப்படுத்த ஒரு குறுகலான வழி. நாம் அதை குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டும். அதுவும் நூற்றாண்டைக் கடந்த ஒரு ஆசிரியரோடு பேசுவது வரலாற்றின் ஆணிவேர்களை தொட்டுணரும் பேரனுபவத்தை கொடுத்திருக்கும். தன் முனைப்பு இல்லாதவர். ஆகவே தீங்கற்ற அரட்டை அவருடையது. அவ்விவாதங்களைக் கடந்து இயல்பான நட்புணர்வு கொண்டவராகவும், எந்நிலையிலும் கற்பிக்கும் ஆசிரியத்தன்மை கொண்டவராகவும் தான் அவர் வாழ்ந்தார். அதுவே அவரது அடையாளம். அவர் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை எவ்வகையிலும் வீணாக்கியவரல்ல. தன் இயல்புக்கேற்ற தளங்களைக் கண்டடைந்து முற்றாக ஈடுபட்டு சுவைத்து, மகிழ்ந்து, வாழ்ந்து நீண்ட நிறை வாழ்வு எய்தியவர். ஆனாலும், துரதிருஷ்டவசமாக அவரோடு என்தொடர் உரையாடல் நிகழவில்லை. இடம்மாறி வாழ்வது எங்கள் இருவருக்கும் பொது விதியாகி இருந்தது.

அஞ்சலி.

**கலாநிதி. கனகசபாபதி சரவணபவன்,**
**(அன்புவழிபுரம், திருகோணமலை)**
**ஜேர்மனியிலிருந்து**

*காராளர் குலதிலகரென உலகெலாம் களிக்கும் கருணைமிக்க*
*ஏராளனாம் கனகசுந்தரப் பேர்ப் பெருமாள் என்றிலங்கச் சூட்டி*
*நீராளவாவி செறிநெறிய கட்டுக் குளத்தூரும் நிலையாயீந்து*
*சீராளனாம் பெரியகுளக்கோட்டன் அவர்க்கின்ன செப்பலுற்றான்*

- கோணேசர் கல்வெட்டு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற பெருமகன்

சைவத்திரு கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்கள் தனது நூற்றி ஏழாவது அகவையை அண்மிக்கும் நேரத்தில் அமரத்துவமடைந்தமை இலங்கைவாழ் சைவசமயிகளுக்கு ஒரு பேரிழப்பாகும். திருக்கோணமலையில் நிலாவெளிக் கிராமத்தில் தோன்றிய அமரர் கெஜரெத்தினம், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறு படைத்த பெருமைக்குரியவர். இவரை "மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற பெருமகன்" என்று குறிப்பிடுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக, ஆலய பரிபாலன சபைத் தலைவராக, பௌராணிக வித்தகராக, இந்து பரிபாலன சபைத் தலைவராக, கிராம முன்னேற்றத் தலைவராக ஐக்கிய நாணய சங்கத் தலைவராக எனப் பற்பல சமூகப் பணிகளில் மண்ணில் நல்ல வண்ணம் தன்னை அடையாளப்படுத்திய ஆளுமை மிக்க சான்றோனாகத் திகழ்ந்த பெருமை இவருக்குண்டு. "நிலாவெளி வரலாறும் பண்பாடும்" எனும் நூலை எழுதிய சிறப்பும், பெருமையும் இவருக்கே உரியது.

யாழ்ப்பாணத்திலேயே, "கந்தபுராண படனம்" செல்வாக்குடன் விளங்குவதாகப் பலரும் குறிப்பிடுவர். ஆனால் "கந்தபுராணப் படனம்" கிழக்கிலங்கையிலும் திருகோணமலையிலும் சிறப்புடன் விளங்குவது குறிப்பிடப்பட்டதாகும். அமரர். கெஜரெத்தினம் அவர்கள் 1947 ஆம் ஆண்டு முதல் கிழக்கிலங்கையில் புராணப்படலத்தில் ஈடுபட்டு நிலை நிறுத்திய சாதனைக்குரியவர்.

தனது 104 ஆவது வயதிலும் கந்தபுராணத்திற்கு உரை சொன்ன இம்மகத்தான மனிதரைப் போல் உலகில் யாரும் இல்லை. புராணபடன வித்தகர் பருத்தித்துறை வேதாரணியக் குருக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் பௌராணிகர் சண்முகக் குருக்களை அமரர்.க.கெஜரெத்தினம் அவர்கள் குருவாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கந்தபுராணத்தில் விஸ்வரூப தரிசனத்திற்கு இவர் உரை கூறும் பாங்கு பலரையும் பரவசப்படுத்துவதாக அறிந்து அக மகிழ்கின்றேன். அமரரை ஒரு தடவையேனும் தரிசனம் செய்ய விரும்பிய போதும் அதற்கு யாம் கொடுத்து வைக்கவில்லை.

அமரருடைய அருமையான பிள்ளைகளுள் ஒருவரே திருமிகு கெ.தவராசா ஆவார். அவர் ஒரு பண்ணிசையாளர், பண்புடையவர், கண்ணியம் மிக்கவர், ஆலயத்தொண்டை தொண்டாகக் கொண்டவர். இவர் நயினாதீவு ஸ்ரீநாகபூசனி அம்மன் கோவில் நிறைவேற்று அலுவலகராகவும் பணிபுரிந்த போது இவர் பாடிய பண்சுமந்த பாடல்களைப் பல நாட்கேட்டு பரவசப்பட்டுள்ளேன். அவர் தனது தந்தையின் வழிநடத்தில் "புராணபடணம்" செய்வதையும் கண்டுகளித்தேன்.

நூற்றாண்டு விழாக்கண்ட அமரர்.க.கெஜரெத்தினம் ஐயா அவர்கள் மேலும் ஆறு ஆண்டுகள் வளத்துடன் வாழ்ந்து இறைபதம் எய்தியுள்ளார். அமரரின் ஆத்மா சாந்தி பெற திருவருளை வேண்டுகின்றோம்.

பேராசிரியர். **மா.தேவநாதன்,**
**மேனாள் தலைவர்,**
**ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில், நயினாதீவு**
**மேனாள் தலைவர்,**
**இந்து நாகரீகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயா ஒரு பல் துறைச் சாதனையாளர்

நிலாவெளியின் மிக மூத்த பிரஜையாக மண்ணின் மைந்தனாக வாழ்ந்த மதிப்புக்குரிய திரு கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் ஐயா அவர்கள் கட்டுக்குளப்பற்றுப் பகுதியின் முதலாவது ஆசிரியராக 25.03.1936ல் நியமனம் பெற்று தி.'.சாம்பல்தீவு மெ. மி. த. க. பாடசாலையில் கடமையாற்றத் தொடங்கி அதன் பின் திருகோணமலை பெருந்தெரு மெ.மி.த.க. பாடசாலையிலும், பின்னர் நிலாவெளி மெ. மி. த. க. பாடசாலையிலும் உதவியாசிரியராகவும் பின்னர் 04.05.1964 முதல் அதிபராகப் பணியாற்றி 14.03.1971ல் ஓய்வு பெற்றார். ஐயா சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் வாழ்நாள் முழுவதும் இப் பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டவர்.

ஐயா அவர்கள் இப் பாடசாலையில் நீண்டகாலம் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய காரணத்தினால் எமது கிராமத்தின் பெரும்பாலானோர் அவரது மாணாக்கர்களாகியமை ஆச்சரியப்படத்தக்க தொன்றல்ல. இவரது மாணாக்கர்களில் என்னைப் போன்ற பலர் ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் இதே பாடசாலையிலும் பிற பாடசாலைகளிலும் பணியாற்றக் கிடைத்தமை எமக்கும் பெருமை. ஐயாவுக்கும் பெருமை.

ஐயா அவர்கள் கல்விப் பணியோடு மட்டும் நின்று விடாமல் இக் கிராமத்தில் சமயப்பணி சமூகப்பணி என்பவற்றிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். நிலாவெளி சித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றி 1972ம் ஆண்டில் ஆலய கும்பாபிஷேக விழாவினை ஊரவர்களுடன் முன்னின்று நிகழ்த்தி வைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996ம் ஆண்டில் மீண்டும் ஆலய பரிபாலன சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் தான் 2002ல் இக் கோயில் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார். அவர் தனது முதுமை காரணமாகத் தலைமைப் பதவியிலிருந்து ஒதுங்க அவரது மாணாக்கர்களில் என்போன்ற பலர் மாறி மாறி ஐயாவின் வழிகாட்டலில் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ளோம்.

நிலாவெளி கிராம முன்னேற்றச் சங்கம் போன்ற அமைப்புகளில் தலைமைப் பதவியிலிருந்தும் இக் கிராம மக்களுக்குப் பல சேவைகளை ஆற்றியவர். மேற்படி அமைப்புகளில் தலைமைப் பதவிகளில் இருந்த போதும் என்னையும் அக்குழுக்களில் இணைத்துக் கொண்டதனால் சில வருடங்களின் பின்னர் அவரது வழியில் நின்று சேவையாற்ற வைத்தார்.

எனது சிறுபராயத்திலிருந்தே ஐயாவுடனும் ஐயாவின் தாயார் சகோதரருடனும் எனது பெற்றோர் சகோதரர்கள் நட்புறவு பேணியிருந்நதமையும் எனக்கு நல்ல ஞாபகம் உண்டு. ஐயாவின் தாயாரை நாங்கள் 'கயிலாயப் பெத்தா' என்றே அழைப்போம். எனக்குச் சிறுவயதில் தடிமல் தலையிடி காய்ச்சல் வந்தால் கயிலாயப் பெத்தா "உனக்குக் கண்ணூறு, நீ வீட்டவா", என்று கூட்டிப்போய் ஐயாவிடம்"இவனுக்குக் கண்ணூற்றுக்குப் பார்த்து விடு தம்பி" என்று சொல்ல ஐயாவும் உடனே நிறை செம்பு நீரெடுத்துக் கவிழ்த்து வைத்த பனையோலைப் பெட்டியின் மீது அதனை வைத்துத் தான் ஒரு பலகைக் குற்றியில் அமர்ந்து கொண்டு என்னை எதிரிலே நிலத்தில் அமரச் சொல்லி ஏதோ மந்திரங்கள் சொல்லிச் சொல்லிப் பாக்கு வெட்டிக் காம்பினால் அந்தச் செம்புநீரைக் கிளறிக் கொண்டிருப்பார். மந்திர உச்சரிப்பு முடிய ஐயா எழுந்து செம்பு நீரைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது உள்ளங்கையில் ஊற்றி மூன்று முறை எனது முகத்தில் ஓங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசிற அடித்துவிட்டு மூன்று மிடர் குடிக்கவும் தந்துவிடுவார். அத்துடன் எனது தடிமல் தலையிடி காய்ச்சல் எப்படித்தான் குணமாகுவதோ நான் அறியேன். இதைப் போலப் பலரும் வந்து சிகிச்சைபெற்றுப் போவதையும் நான் அறிந்திருந்தேன்.

ஐயாவின் ஆசியும் வழிகாட்டலும் எனது சேவைக்குப் பெருமளவு உறுதுணையாக இருந்தது என்பதையும் அதன் மூலம் நான் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டுக் குச்சவெளிப் பிரதேசத்தில் 1982ல் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் 1992ல் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றேன் என்பதையும் இன்று நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகிறேன்.

106 ஆண்டுகளும் 11 மாதங்களும் சிறப்புற வாழ்ந்த ஐயா அவர்கள் 13.02.2021ல் காலமாகிவிட்ட செய்தி எங்கள் காதுகளுக்கெட்டியதும் கலங்கி விட்டோம். ஐயாவின் இறப்பு எமக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதே நாம் அவருக்கு இன்று செய்யக் கூடிய நன்றிக் கடனாகும்.

செ.கனகசபை
ஓய்வு பெற்ற பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(குச்சவெளிப் பிரதேசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு க. கெஜரெத்தினம் அவர்கள்
# அன்னாரது நீங்காத நினைவுகள்

தி/கும்புறுபிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் 1960 ஆம் ஆண்டு ஐயா அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய சமயம் திருகோணமலை மெதடிஸ்த திருச்சபையின் மூலம் எனக்கு 03.05.1960 ஆம் ஆண்டு மேற்படி பாடசாலைக்கு உதவி ஆசிரியராக நியமனம் வழங்கப்பட்டது.

ஐயா அவர்களே எனது முதல் தலைமை ஆசிரியர் ஆவார். அன்னார் 106 வது வயதில் இறைவனடி சேர்ந்தமையைக் கேள்வியுற்று மிகுந்த வேதனை அடைந்தேன்.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை ஐயாவுடனும் அன்னாரது குடும்பத்துடனும் நெருக்கமான உறவைப் பேணி அவரது அன்புக்குப் பாத்திரமானவனாக அறுபத்தொரு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

அன்னார் எனது ஆசிரியப் பணியில் சிறந்த ஒரு வழிகாட்டியாகவும் நல்ல ஆசானாகவும் ஒரு சிறப்பான மேய்ப்பனாகவும் திகழ்ந்தார். அதன் விளைவாக நான் எனது பணியில் உதவி ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராகப் படிப்படியாகப் பதவி உயர்ந்து இறுதியாகத் திருகோணமலை கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்து 11.07.2001ல் ஓய்வு பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எனது தொழில் வளர்ச்சியில் ஆணி வேராகவும் உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர் ஐயா அவர்களே என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐயாவைப் போன்றவர்கள் தோன்றுவது மிகவும் அரிது! "தோன்றிற் புகழொடு தோன்றுக..." என்ற வள்ளுவர்வாய் மொழிப்படி ஐயா இந்தப் பூவுலகில் புகழோடு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரது மறைவால் துயர் உறும் அவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு நிறைவு செய்கின்றேன்.


நன்றி.

க. ஜெபரெட்னம்.
ஓய்வுநிலை அதிபர்.
364, மத்தியவீதி,
திருகோணமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவிழாக்களில் கௌரவிக்கப்படும் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

பூவாரம் சூடிப் பொன்னெழில் மேவிட
பாவாரம் யாத்துச் சம்பந்தர் உவந்து
தேவாரம் பாடக் கோணமலை யீசன்
தாவாரம் தன்னில் வந்து தித்தாயே

தந்தை இறந்த கையறு வேளையில்
சிந்தை கலங்கி அன்னை துடிக்க
சொந்தம் பந்தம் பாராது போகையில்
முந்தைப் பயனாய் முன்னோடி வந்தாயே

ஐந்தோடு என் கல்வி நின்றுவிடும் என்றன்று
நொந்து அன்னை ஆற்றாது துடிக்கையில்
வந்தர வணைத்து அழைத்து சென்று
தந்திட்ட கல்விச்செல்வமதை மறப்பேனா

அள்ளித் தந்த ஆசியும் அரவணைப்பும்
சொல்லிக் கொடுத்த அன்பும் அறனும்
பள்ளிக் கல்வியை சிறப்புடன் பெறவே
வெள்ளி வானில் விடிவைத் தந்ததே

ஓங்கிடும் உங்கள் எண்ணம் போலவே
ஆங்கிலத் தோடுதமி ழாசிரியப் பயிற்சி
ஓங்கிடும் சிறப்பில் பெற்றமை கண்டு
நீங்கிடா இன்பம் கொண்டி ருந்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டத்தை யன்று போக்கிய தாலே
கோட்டத்தை யாளும் கல்வி அதிகாரி
நீட்டத்தை பதவியில் நானும் அடைந்து
கூட்டத்தில் உயர முடிந்த துன்னாலே

வல்லமனை யறமது கொள்ளல் கண்டாய்
செல்ல மகவுகள் வாய்க்க மகிழ்ந்தாய்
நல்ல கல்வி யுறக்கண்டு நெகிழ்ந்தாய்
எல்லாம் எனக் களித்து சென்றாயே

நிலாவெளி நந்நில நாயகனே நிலைத்து
உலாவெளி தந்த உத்தம செல்வமே
இலாது போகாது உன்புகழ் இங்கே
செலாது விடாரே இந்நில மாந்தரே

வ.தங்கராசா,
முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் மஞ்சத்தடி மூதறிஞர்

# அமரர்.க.கெஜரெத்தினம் அவர்கள்

இம்மண்ணில் 15.03.1914 அன்று அவதரித்து 13.02.2021 அன்று அமரரான கெஜரத்தினம் அவர்கள் இம்மண்ணில் நற்பேறு பெற்றவர். இவர் நற்குடியில் பிறந்து நமது முன்னோர் காட்டிய பாதையில் சைவ சமயத்தை நன்கு பேணியும் கல்வியுலகில் பிரவேசித்து ஆசிரியராக, பாடசாலை அதிபராக சிறந்த கலை மரபு காத்தவராக 107 வருட காலத்தில் இம்மண்ணில் யாவராலும் நினைவுகூறப்பட்டவர்.

இறைவன் அனைவருக்கும் தமது சிறப்பை உணர்த்துவதன் பேரில் ஊர்களின் மத்தியில் எழுந்தருளித் தம்மை நாடும் அருளாளர்களையும் ஊர்களின் மத்தியில் அவதரிக்கச் செய்து அவர்கள் மூலம் சில கடமைகளையும் வளர்த்தவர். பிறந்த ஊராகிய நிலாவெளியில் 106 வருடங்களை நிறைவாகப் பெற்று வாழ்ந்தவர் அமரர் க.கெஜரெத்தினம் அவர்களே. தமது குலமரபிற்கேற்ப சைவம் தமிழ் கலைகளின் பற்றினால் தமது ஓய்வு காலத்தின் பின் மஞ்சத்தடியில் வாழ்ந்து புராணபடன சேவை செய்தவர். இவரின் முன்னோரின் தொடர்பு, ஆற்றிய பணிகள் பற்றி அறிவோம்.

கெஜரெத்தினம் அவர்களின் தாயார் பிறந்த இணுவிலில் அவதரித்தவர் இணுவில் பெரிய சந்நியாசியார் என்னும் சித்தர். 15 வயதிலிருந்து பாழடைந்த இணுவில் கோண்டாவில் காரைக்கால் புராதன சிவாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து வழிபடச் செய்தவர். இவ்வாலயச் சூழலில் 1008 மூலிகை மரம் நாட்டியும், 7 நீர்நிலைகளைத் தோண்டியும் சித்த வைத்தியத்தைத் தமது சித்து மகிமையால் நிலைநாட்டியும் உலகப் பெருமஞ்சத்தை 1895 இல் பவனி வரச் செய்தும் அருட் பணியாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சந்நியாசியார் பிறந்த மண்ணில் 21 ஆலயங்களாற் சைவம் போற்றப்படுகிறது. சிறந்த தமிழ்க்கல்வி, சமயம், பல்சுவைக் கிராமியக் கலைகள் வாழ்ந்த காலமானதால் பெரியார் இவை யாவற்றிலும் சிறப்படைந்தார். அக்காலத்தில் நாட்டார் பாடல், நாட்டுக்கூத்து, காவடியாட்டம் யாவற்றையும் வளர்த்த அண்ணாவியார் ஏரம்புநாதர் அவர்களுடன் நாட்டுக்கூத்தை இம்மண்ணில் வளர்த்த V.M.சுப்பையா V.M.நாகலிங்கம் ஆகியோர் சிறந்த நடிகர்களாகவும் சிறந்த பாடகர்களாகவும், நாடகம் வளர்த்த அண்ணாவியார்களாகவும் பிரகாசித்தனர். V.M. நாகலிங்கம் அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த நாடக நடிகர்களான கிட்டப்பா போன்ற பலருடன் சரிநிகர் சமமாக நடித்தும் முன் ஆயத்தமில்லாமல் உடன் இயற்றிப் பாடியும் நாடக உலகில் பிரகாசித்தவர். நடிப்பின் சிறப்பால் சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற பல இடங்களிலும் நடித்து நடிகவேல் எனப் பல பட்டங்களும் பெற்ற கலைஞானியாவார். அண்ணாவியார் சுப்பையா, நாகலிங்கம் ஆகிய இருவரும் பெரிய சந்நியாசியாரால் அரவணைக்கப்பட்ட கலை ஞானியர்களாவர்.

இவர்களின் உடன் பிறந்த சகோதரியின் புதல்வர்களில் அமரர் க.கெஜரெத்தினம் அவர்களும் ஒருவர். இதனால் இவரிடம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் குடிகொண்டன. கல்வியால் உயர்ந்து கல்வி அதிபரானார். சைவசமயப் பண்பாட்டில் ஆலய தரிசனம், திருமுறை ஓதுதல், கந்தபுராண படனம் செய்தல் ஆகிய நற்பண்புகளும் ஒட்டி உறவாடின. இவர் தமது பிற்காலத்தில் மஞ்சத்தடி முருகனாலயத்தில் வழிபாட்டுடன் கந்தபுராண படனஞ் செய்த தமிழ் இன்றும் எமது கண்ணில் பசுமையாகவே உள்ளது. காலங்கள் கடந்தன. இன்று அமரரான பெரியாரின் நினைவு மலரில் அவரின் சிறப்பைத் தெரிவிக்கும் ஆர்வம் மேலிட்டது. எனது தள்ளாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதிலும் இப்பெரியாரின் சிறப்பை எழுத உணர்த்திய இறையருளுக்கு நன்றிகள்.

இணுவில் திருவூரின் சிறப்பை நாடி 1962 இல் சைவத்திருநெறிக்கழகம் என்னும் அறப்பணி மையத்தை உருவாக்கினோம். 1974 முதல் இறைபணித் தொடர்பில், 1997 இல் அறநெறிப் பாடசாலை நிறுவி அதன் பேறாக நமய நூல்கள் எழுதி வெளியிட்டதோடு பெரிய சந்நியாசியாரின் சமாதியடைந்த 100 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நூல்கள் வெளியிட்டோம். 2018 ஆம் ஆண்டு பெரிய சந்நியாசியரின் 101 ஆம் ஆண்டு நிறைவில் அவரின் வரலாற்று நூலை வெளியீட்டும் விழாச்சிறப்பிற்காகப் பெரிய சந்நியாசியாரின் பணிகளைத் தழுவிய பத்து சிறந்த பெரியார்களை கௌரவித்தும் யாவரையும் சிறப்பித்தோம். இதே வரிசையில் அமரர் கெஜரெத்தினம் ஐயா அவர்களை நேரிற் சந்தித்தேன். உடல் நலமற்றுப் படுக்கையில் இருந்தவர் எழுந்திருந்து உரையாடினார். கந்த புராண படனஞ் செய்தமைக்காக எமது விழாவில் கௌரவிக்க உள்ளோம். உங்களின் சம்மதம் பெற வந்ததாகத் தெரிவித்தேன். அவரின் பூரண சம்மதத்தைப் பெற்றதுடன் மேலும் ஒன்பது முதியோரையும் நேரிற் சென்று சம்மதம் பெற்றேன்.

எமது விழா மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் நடைபெற்றது. ஐயா தமது இயலாமையிலும் மகன் தவராசா அவர்களின் உதவியுடன் வாகனம் மூலம் சக்கரநாற்காலியின் உதவியுடன் மண்டபத்தை அடைந்தார். இவர் மேடை மீது வர முடியாததால் விழாவை அலங்கரிக்க வந்த பல பெரியார்கள் வந்து பொன்னாடை, மாலைகள் இட்டுக் கௌரவித்தனர். எமதூர் பெருமகன் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுகன் அவர்களால் பெரிய சந்நியாசியாரின் உலகப் பெருமஞ்ச விருதும் வழங்கிப் பெருமைப்படுத்தினோம். இப்பணி எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தின் செயற்கரிய பணியாகும். இந்த நிகழ்வு எமது மண்ணின் சிறப்பின் அடையாளமாகும்.

எமது சைவநெறிக்கழகம் நிறுவிய சிவகாமி அறநெறிப் பாடசாலை ஆரம்பித்த போது அறநெறிப் பாடசாலையிற் பண்ணிசை போதிக்கும் பணியை ஏற்றவர் அமரரின் புதல்வர் திரு.கெ.தவராசா அவர்கள். இவர் தமது நான்கு புதல்வியரை இப்பாடசாலையில் இணைத்தவர். இவரின் மூத்த மகள் சங்கீதா சில வருடங்கள் இப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்றவர்.

சைவப் பண்பாட்டுடன் முத்தமிழையும் வளர்த்த இணுவில் திருவூரில் ஆரம்பகாலக் கூத்திசைக் கலைஞர் வழிவந்த மருகர் கெஜரெத்தினம் அவர்களின் வாரிசுகள் ஏனையோர் திருகோணமலையில் வாழ்ந்தாலும் அவரின் சிறப்பான வழிகாட்டலில் திரு.கெ.தவராசா இணுவிலில் அரும்பணி யாற்றுவதும் இம்மண்ணின் தவப்பேறாகும். இவை யாவும் கடந்த காலப் பதிவுகளாகும். இப்பதிவுகள் நாலு சந்ததி வரை துலங்குவது போல மேலும் சிறப்படைய வேண்டும். அமரர் கெஜரத்தினம் ஐயாவின் நினைவு நாளில் மேலும் பல அறப்பணிகளைத் தொடர்வதற்கு அமரரின் பணி வழிகாட்ட வேண்டுமென எம்மை உய்விக்கும் சிவகாமி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

என்றும் அறப்பணியுடன் கலந்த

**இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**
**இணுவில் சைவத்திருநெறிக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018ம் ஆண்டு பெரியையா அவர்கள் இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தால் 'உலகப்பெருமஞ்ச விருது' வழங்கி கௌரவிக்கப்படுகிறார்



2012ம் ஆண்டு பெரியையா தம்பதியினர் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களால் கௌரவிக்கப்படுகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியையா தம்பதியினர் பொது விழாக்களில் கௌரவிக்கப்படும் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "106 இல் NOT OUT"

எமது பெரியையா - ஒரு பொக்கிஷம்.

அவர் இப்போது இங்கு இல்லாவிட்டாலும் கூட நாம் செய்யும் எல்லாவற்றிலும் அவரது அனுபவமும், அறிவுரையும் இருந்து எம்மை வழி நடாத்துகிறது.

விஞ்ஞான ரீதியாக உடலின் தன்மை, இயக்கம், பழக்கவழக்கம் என்பன வயது முதிர்ந்த காலத்தில் மீண்டும் குழந்தைப் பருவம் போல் மாறிவிடும். இந்தக் கொள்கையை மாற்றி 106 இலும் ஞாபகசக்தியின் உதாரணமாகத் திகழ்ந்த "நடமடாடிய Google" எம் பெரியையா.

நிலாவெளியின் வரலாறு - அது கோயில்களோ, பாடசாலைகளோ, ஏன் வயல், காடு, நிலங்கள் என தனது முன்னோர்கள் வழி வந்த தகவல்களுடன் தனது அனுபவத்தையும் சேர்த்து தகவல் களஞ்சியமாக தனது மூளையில் இறுதி நேரம் வரை எதுவித சேதாரமும் இல்லாமல் வைத்திருந்தது ஓர் அதிசயமே.

எமது நிலாவெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய 2012 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரை தயாரிக்கும் போது கோயிலின் வரலாற்றை புத்தக வடிவில் ஆவணப்படுத்த ஆவலுற்ற எம்மை ஊக்கப்படுத்தி வழிகாட்டிய குருவும், வரலாற்றாசிரியரும், முன்னைய நிர்வாக சபை தலைவரும், மலரை தயாரிக்க எம்மை விட வாலிபனாகவும் இருந்து அந்த மலரை தரமானதாக கொண்டு வந்தவர். இதனாலேயே இன்று இக்கோவிலின் வரலாறு, தோற்றம், அபிவிருத்தி, வழிபாட்டு முறைகள் என்பன உள்ளங்கை நெல்லிக்கனியாக எம்மனைவருக்கும் தெரிகிறது.

பெரியையா தனது மூத்த மகனுடன் திருமலை நகரில் வாழ்ந்த சமயம் நான் அவரை இடையிடையே சென்று சந்திப்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சந்திப்பின் போதெல்லாம் நான் அவரிடம் உடல் நலம் விசாரிப்பதற்கோ அல்லது அவர் தானாக என்னிடம் மருத்துவ ஆலோசனை எதுவும் கேட்பதற்கோ தேவையிருக்காது. என்னைக் கண்டதுமே ஐயா நிலாவெளி மாரியம்மன் கோவில் பற்றிக் கேட்கத் தொடங்கி விடுவார். ஒரு நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும் என அவர் சொல்லிக் கொடுத்தது இன்னும் இன்றும் நடைமுறைபடுத்த முடிகிறது. அவர் எப்படி இவ்வளவு காலம் ஆரோக்கியமாக வாழ்ந்தார்.? உண்மையில் விஞ்ஞான ரீதியாக ஆவணப்படுத்தபட வேண்டிய விடயம்.

- அவரது உணவுப் பழக்கமுறை.
  கண்டதையும், கண்டநேரத்திலும் உண்பவரல்ல.
  இயற்கை உணவில் ஆர்வம், போதியளவு தண்ணீர் அருந்துதல்.
- அளவான ஓய்வு.
- தீய பழக்கவழக்கங்களுக்கு விலக்களித்திருந்தமை.
- பதற்றப்படாமல் எப்போதும் நிதானமாக இருத்தல்.
- புன்னகை பூத்த முகம்.
- திட்டமிட்டு நிதானமாக வேலையாற்றல்.
- கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை.
- சமயத்திலும் தமிழிலும் உள்ள பற்று.

இப்படி பல காரணங்கள் அவரது 106 வயது இளமையின் இரகசியம். பெரியையாவிடம் நிலாவெளிப் பாடசாலையில் கல்விகற்ற எனது தந்தையார் என்னையும் பெரியையாவிடம் 2ம் வகுப்பிலிருந்தே தனிப்பட்ட முறையில் அவரிடம் அனுப்பிப் படிக்க வைத்ததால் அவர் என் தந்தைக்கும் குருவாக எனக்கும் குருவாகக் கிடைத்தமையையிட்டுப் பெருமையடைகிறேன்.

உண்மையில் அவர்தான் பெரியையா.
ஏனென்றால் 106 வயதில் காலமாகியும் மனதில் இப்போதும் காணக்கூடியவராக இருக்கிறாரே!

**வைத்தியர். சண்முகராஜா கோகுலன்.**
நிலாவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிறைந்த பெரியார்

அமரர் கனகர் கைலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்களோடு பழகும் பாக்கியம் அவரது மூத்த புதல்வர், ஆங்கில ஆசிரியர் சித்திரவேலாயுதன் அவர்கள் மூலம் கிடைத்தது. அப்பொழுது அவருக்கு வயது அறுபது. சிரித்த முகத்துடன் என்னை வரவேற்று உரையாடினார். அவரது இரண்டாவது புதல்வர் திரு கெ.தவராஜாவை, அவர் மன்னாரில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது முதலில் சந்தித்து இருவரும் நட்புடன் இன்றுவரை தொடர்பிலிருக்கிறோம். அவரது இளைய புதல்வர், ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர் திரு. கெஜ. தர்மகுலராஜாவைத் திருகோணமலையில் இடம்பெற்ற கவியரங்கு ஒன்றில் சந்தித்துப் பின்னர் அவருடன் திருகோணமலை குடியியல் உயர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளனாகக் கடமையாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. நிலாவெளியின் பண்பாட்டு அடையாளமாகவும், வரலாற்றுப் புத்தகமாகவும் விளங்கும் ஐயா கெஜெரெத்தினம் அவர்களின் புதல்வர்கள் மூவரும் எனக்கு நெருங்கிய நண்பர்களாக விளங்குவது என்பாக்கியமே. அவரது நூறாவது பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் என்னால் மறக்க முடியாத ஒன்று. குறள்வழி நடந்த குணவான் அவர்! தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன்மகன் முந்தியிருக்கும் படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.

*தகப்பன் தன் பிள்ளைக்குச் செய்யும் நன்மை, கற்றவர் அவையில் முதன்மை பெறச் செய்வதே.*
*தகப்பன் தன் குழந்தைகளுக்கு செய்ய வேண்டிய நன்றி ஞான கூட்டங்களில் முன்னோடியாக இருக்க செய்வது.*

ஐயாவின் புதல்வர்களும் குறள் சொல்லும் வழிநடந்து அன்னாரின் பெயர் சொல்லும் பேறுடையார்.

**வாழ்க அவர் புகழ், வளர்க அவர் வழித்தோன்றல்கள்.**

**அன்புடன்**
**A.J.புஷ்பராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சைவத்திருநெறித் திலகம்’
## கயிலாயபிள்ளை கெஜரெத்தினம்

ஐயா அவர்களுடன் முதற் சந்திப்பு 1968 ஆம் ஆண்டில் நிலாவெளியில் எனக்குக் கிட்டியது. அவர்களுடைய மகளின் திருமண ஒழுங்கு சம்பந்தமாகக் கதைப்பதற்குத் தம்பி சிவலிங்கம் என்னை அழைத்துச் சென்றார். அன்றைய தினம் இரவு ஐயா வீட்டில் தங்கிய வேளையில் ஐயாவின் ஆசிரிய சேவையுடன் சமய, சமூகப் பணிகள் யாவற்றையும் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

யாழ்ப்பாணம் இணுவிலைப் பூர்வீகமாகக் கொண்ட அன்னாரின் மாமன்மார் வீ. எம். சுப்பையா, வீ. எம். நாகலிங்கம் ஆகிய நாடகக் கலைஞர்கள் நிலாவெளிக்கு நாடகம் நடிக்கச் சென்ற போது நாடக ஒழுங்குகளுக்காக வட்டவிதானையாராக இருந்த கயிலாயபிள்ளை அவர்களுடன் தொடர்பு கொண்டனர். இத் தொடர்பின் நிமித்தம் இவர்கள் தமது சகோதரி மாணிக்கம் அவர்களை விதானையாருக்குத் திருமணம் செய்து வைத்தனர். மாணிக்கம் ஆச்சி இணுவில் தொடர்பு அற்றுவிடக் கூடாது எனக் கருதித் தனது பேரப்பிள்ளைகளான கெஜரெத்தினம் ஐயா அவர்களின் பிள்ளைகள் இருவரை இணுவிலில் உள்ள உறவினர்களிடையே திருமணம் செய்து வைத்தார். இதன் மூலம் ஐயா அவர்களின் பூர்வீகத் தொடர்பு தொடர்ந்தது.

நாட்டில் அமைதியின்மை காரணமாக ஐயா அவர்கள் திருக்கோணமலை நகரிலும் யாழப்பாணத்திலும் வாழ்ந்த காலத்தில் இணுவில் அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் கோயிலுடன் தொடர்பு ஏற்பட்டது. இவ்வாலயத்தில் 1975 ஆம் ஆண்டு பங்குனிமாதம் மகா கும்பாபிஷேகத்தின் பின் ஆரம்பமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணப்படிப்பில் பங்குபற்றிய அமரர்கள் மு.வேலாயுதபிள்ளை ஆசிரியரும், வே. சண்முகலிங்கம் அவர்களும் உரை சொல்லும் போது பொருளை வாசிப்பதாகவே இருந்தது. இவர்களின் மறைவின் பின்னர் ஐயா அவர்களின் மகன் கெ.தவராசா, கமலநாதன், சி.நடராசா (குலசிங்கம்), கா.தம்பிராசா ஆசிரியர் ஆகியோர் பராண படனம் செய்து வந்த காலத்தில், இருபாலையில் மகளுடன் தங்கி வாழ்ந்த கெஜரெத்தினம் ஐயா அவர்கள் 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2008 வரையிலும் பின்னர் 2012இல் தனது 98ஆவது வயதிலும் ஆறு நாள்களும் மஞ்சத்தடி முருகன் கோவிலில் கந்தபுராணப் படிப்புக்கு எல்லோருக்கும் விளங்கக் கூடியதாக மிகத் தெளிவான குரலில் தனக்கேயுரிய பாணியில் உரை சொன்னவர். 103 ஆவது, 105 ஆவது வயதுகளிலும் ஒருநாள் கலந்து கொண்டு உரை சொல்லிச் சிறப்பித்தமை எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது. பாடுபவர் ஒரு சொல் பிழைவிட்டால் முழுப்பாடலையும் பாடிப் பொருளுரைக்கும் வல்லமையாளராகத் திகழ்ந்தார். கேட்போருக்கு விளங்கக் கூடிய வகையில் சில உப கதைகளையும் கூறுவார். இதனை முருக பக்தர்கள் கேட்டு இன்புற்றமையை இன்றும் நினைவு கூருகின்றனர்.

ஐயா அவர்கள் தனது இறுதிக் காலத்தைச் சந்தோசமாக எதிர் கொண்டவர். அவர் எப்போதும் புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் எல்லோருடனும் கதைப்பவர். இவருடன் கந்தபுராணம் பாடியவர்கள் இடையிடையே சென்று கதைக்கும் போது கந்தபுராணப் பாடல்களைப் பாடிவிளக்கம் கொடுத்துக் கதைப்பார். கந்தபுராணத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்தகாரணத்தாலேயே, தனது இறுதி நேரத்தில் 'கதிர்காமம் வந்திட்டேன்' எனக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா தன்னைப் போன்று தனது பிள்ளைகளையும் சமயப் பற்றாளர்களாக வழி நடாத்தியுள்ளார். "பிறந்தோர் யாவரும் இறப்பது உறுதியாயினும் இறைவனைத் தினமும் மனதில் நிறுத்தி 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனச் சேவையாற்றினால் மரண பயம் வரமாட்டாது" என்ற செய்தியை விட்டுச் சென்றுள்ளார்.

பெருவாழ்வு வாழ்ந்து தனது 106 ஆவது வயதில் எல்லாம் வல்ல எம்பெருமான் பாதாரவிந்தங்களைச் சென்றடைந்துள்ள கெஜரெத்தினம் ஐயா அவர்களது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பெ.கனகசபாபதி.
சமாதான நீதிவான்
பொருளாளர்,
அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்
## அமரர் கயிலாயபிள்ளை கெஜரெத்தினம் அவர்கள்

மன்னனுக்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பென்பர். உண்மையில் கல்வி மற்றவர்களுக்குக் கொடுப்பதனால் ஒருபோதும் குறைவுபடாது. மாறாகப் பெருகிக் கொண்டேயிருக்கும். அத்தகைய கல்வியைப் பெரும் மூலதனமாகக் கொண்டு சமூகத்துக்குப் பெரும் சேவை செய்தவர் தான் அமரர் கெஜரெத்தினம் அவர்கள். இலவசக் கல்வி நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே மிஷனரியில் கல்வி கற்று ஆசிரியராகிப் பலரைக் கல்வியறிவுடையோராக்கி ஆசிரியர்களாகவும் வேறு அரச பணியாளர்களாகவும் சமுதாயச் சிற்பிகளாக உருவாக்கி நிலாவெளியின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையன்று.

மேலும் தன் மூன்று ஆண்மக்களையும் கற்பித்து அரச உத்தியோகத்தர்களாக்கி அவையத்து முந்தியிருக்கச் செய்து சமூகத்துக்குப் பயன் விளைத்த ஒரு நூற்றாண்டைக் கண்டு, கடந்த பெருமகன். அது மாத்திரமன்று. அவரது புதல்வர்களான சித்திரவேலாயுதன், தர்மகுலராஜா ஆகியோர் இலக்கியவாதிகளும் கூட. சித்திரவேலாயுதன் சிறந்த இலக்கியச் சுவைஞர் என்பதோடு நிலவூர்ச் சித்திரவேல் எனும் புனைபெயரில் எழுத்துத் துறையிலும் ஈடுபட்டு வருபவர். தர்மகுலராஜா நிலாவெளியூர் கெஜதர்மா எனும் புனை பெயரில் கவிதை, சிறுகதை மற்றும் நாவல் இலக்கியங்களைப் படைத்துவருபவர். திருகோணமலையில் இயங்கிவரும் இலக்கிய அமைப்பான "நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் "கவியரங்குகளில் தலைமைக் கவிஞராகத் திகழ்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கெஜரெத்தினம் ஐயா அவர்கள் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் கந்தபுராணம் போன்ற சமய இலக்கியங்களிலும் நல்ல பரிச்சயம் பெற்றவர். தனது நூறாவது பிறந்த நாளை நிலாவெளியில் ஊரவர்கள் பெருவிழாவாகக் கொண்டாடிய வேளையில் "நிலாவெளி வரலாறும் பண்பாடும்" என்ற பெயரில் ஒரு வரலாற்று நூலை எழுதி வெளியிட்டவர். இத்தகைய இலக்கியச் செழுமையுடையவரின் புதல்வர்களும் எழுத்துலகில் நுழைவது ஒன்றும் புதுமையில்லையே. ஐயாவின் இரண்டாவது மகன் தவராஜா தந்தையார் தடம் பதித்த சமயத்துறையில் அடியொற்றிச் சென்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் இப்போது யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களில் ஓதுவாராகவும் பிரசங்கியாகவும் திகழ்கிறார். இத்தகைய பெருமைக்குரிய புதல்வர்களைப் பெற்றவர்.

**"தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்**
**தம் தம் வினையான் வரும்."**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அமரர் கெஜரெத்தினம் அவர்கள் அவர் வாரிசுகளினாலும் அவர் உருவாக்கிய கல்விச் சமூகத்தினாலும் இவ்வுலகில் இறவாப் புகழுடன் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

**அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.**

**அன்புடன்**
**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்.**
**ஆசிரியர்**
**"நீங்களும் எழுதலாம் (கவிதை இதழ்)"வாசகர் வட்டம்.**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணங்குகிறேன் ஐயா!

நிலாவெளி ஊரின் ஞானச்சுடர்
நீங்கள் தானென நாம் மகிழ்ந்தோம்
உலாவரும் போதெல்லாம் உங்கள் ஒளி
உயர் தமிழ் மறைகேட்டுயர்வுற்றோம்.
நிலாவெளியூரும் பண்பாடும்
நிறைவாயொரு நூல்செய்தே மக்களித் தீர்
பலவாய்ப் பட்டங்கள் யான் பெற்றும்
பகன்றீர் கவிஞர் திலகமென்றே!

சின்ன வயதில் என் கவிதைத்
திறன்கண்டுவகை நீர் கொண்டீர்
உன்னை உயர்த்தக் கலைவாணித்தாய்
உன்னதக் கருணை உனக்குண்டு
என்றெனை வாழ்த்தி உயர்வளித்தீர்
என்றும் தொடர்ந்தது உமதாசி
கன்றுக்குப் பாலை ஊட்டிவிடும்
கறவைத் தாயைபோல் உரம் சேர்த்தீர்

ஊரில் அனைவருக்கும் பெரியய்யா!
உம்போல் இனியெவர் தமைக்காண்போம்
சீரில் சிறப்பில் பண்பாட்டில்
திறனில் உமக்கிணை யாருண்டு!
பாரில் கெஜரெத்தினம் ஐயா
பாங்குடன் வாழ்ந்த பெருவாழ்வு
பாரினில் வாழும் பேறுள்ளோர்.
யாருக்கும் எட்டாத் திருவாழ்வாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஜனித்த திருவூராம்
நிலாவெளி என்னும் அருள் மண்ணில்
தாங்கள் வாழ்ந்து நிறைவுற்றுத்
தவப்பேறெய்தக் காத்திருந்தீர்
பாங்காய் வாழ்ந்த துணைவி அன்னை
பரன்பதம் இணைந்தார் யாழ் மண்ணில்
நீங்காத் துயரும் வருத்திடவே
நீவிரும் அங்கே இணைந்தீரோ?

பிள்ளையார், முருகன் பத்தினித்தாய்
பிரியம் மிகுந்த மாரி அம்பாள்
உள்ள கோயில் அனைத்துமுங்கள்
உத்தமத் திருப்பணி கண்டவையே
உள்ளத் தெளிவோடிறை பணியில்
ஓயாதுழைத்ததை ஊர் அறியும்
வெள்ளை உள்ளம் கொண்ட எங்கள்
வேந்தே! நூற்று ஏழாண்டு (107)
பிள்ளை உளத்தொடு நீர் வாழ்ந்து
பிணைந்தீர் இறையொடு வணங்குகிறோம்....!


**உங்கள் கவிஞர் திலகம்**
**நிலா தமிழின்தாசன்**
**நிலாவெளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியையா அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவும், அவர் எழுதிய நிலாவெளி - வரலாறும் பண்பாடும் நூல் வெளியீட்டு விழாவும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவை விட்டகலாத என் தந்தை

05.05.1942 இல் எனது பெற்றோருக்கு மூத்த மகளாக நான் பிறந்த போது தாயாருக்கு ஏற்பட்ட சுகவீனத்தால் தந்தையாரே எனக்கு லக்ரோஜன் பாலும் ஆறு மாதத்தின் பின் பசுப்பாலும் பருக்கி வளர்த்தெடுத்ததாக அடிக்கடி அம்மா சொல்வதை நினைத்துப் பார்க்கின்றேன்.

தந்தையாரே எனக்கு ஏடு தொடக்கி வைத்துத் தனது பாடசாலையிலேயே கற்கவைத்தார். அப் பாடசாலையில் எட்டாம் வகுப்புக்கு மேல் வகுப்புகள் நடைபெறாததால் திருக்கோணமலை மெதடிஸ்த மகளிர் ஆங்கிலக் கல்லூரியிற் சேர்த்து விடுதியில் தங்க வைத்து க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்கவைத்தார். விடுதியில் நானிருந்த போது சனிக்கிழமை தோறும் வந்து சிற்றுண்டியும் உணவும் தந்து மகிழ்வித்து மகிழ்வார். இவற்றை என்றும் மறக்க முடியாது.

நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக நிலாவெளியில் இருந்த மக்கள் இடம்பெயர்ந்த காலத்தில் திருமலை நகரில் வாழ்ந்த போது எனது பெரிய தம்பி சித்திரவேலாயுதனும் மனைவியும் மிக நன்றாகப் பராமரித்தனர். எனது கணவனின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க 2005 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து இரு பாலையில் எமது வீட்டில் 2009 வரை வாழ்ந்தனர். ஐயாவையும் அம்மாவையும் நன்கு பராமரிக்க இறைவன் வழிவிட்டான். 2011இல் மீண்டும் நிலாவெளிக்குச் சென்ற தந்தையார் 2014இல் தனது 100ஆவது பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்தார். பின்னர் மீண்டும் எம்முடன் வந்து தங்கியிருந்து அம்மாவின் மறைவின் பின் திருமலையில் பெரிய தம்பியுடன் தங்கி வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி தவராசாவின் வேண்டுகோளுக்கிணங்க 2016 மே மாதம் தொடக்கம் தனது இறுதிக்காலம் வரை இணுவிலில் வாழ்ந்து முருகனடி சேர்ந்து விட்டார். வாழுங் காலத்தில் நீராகாரம் உட்பட அனைத்து விடயத்திலும் நேர ஒழுங்கைக் கடைப்பிடித்தவர். அவரைச் சென்று பார்த்து உரையாடுங் காலத்தில் நிதானந் தவறாது பழைய கதைகளைக் கூறுபவர். அனைத்து விடயங்களிலும் முன்னோர் வகுத்த சாஸ்திர விதிமுறைகளைக் கைக்கொண்ட இவர், புதிதாக ஒரு வீட்டுக்கு விருந்துண்ண, உகந்ததற்ற சில தினங்களிற் சென்றால் செய்ய வேண்டிய பரிகாரத்தை,

**"செவ்வாய்க்குப் பாலாம் தினகரற்கு நெய்யாம்
மெய்யாம் வியாழனுக்கு வெந்நீராம்**

**இந்நாளில் ஒரு விருந்தை இட்டிட வேண்டிற்றால்
சொன்னோம் பரிகாரங் காண்."**

என்ற பாடல் மூலம் கூறுவார்.

பிள்ளைகள் ஐவரையும் அன்போடும் அதே வேளை கண்டிப்போடும் வளர்த்து ஆளாக்கிய எமது தந்தையையும் அவரது நல்வாழ்வுக்கு உந்துசக்தியாக இருந்த எமது தாயையும் எப்பிறப்பிலும் மறக்க முடியாது.

மகள்,
தி.இராசநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயா என்னோடு

நிலாவெளிப் பாடசாலையில் நான் 1956 ல் ஆறாம் வகுப்புச் சித்தியடைந்த பின்னர் என்னை உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும் என்ற பேரவா ஐயாவுக்கு ஏற்பட்டு அவருக்குக் குருவாகவும் வழிகாட்டியாகவும் இருந்த திரு.எம்.கே.சிதம்பரப்பிள்ளை அவர்களை அணுகிய போது பருத்தித்துறையில் உள்ள பிரபல பாடசாலையான ஹாட்லி கல்லூரியில் அனுமதி பெற்றுத் தந்தார். ஹாட்லியில் ஏழாம் வகுப்பிலிருந்து கல்வியைத் தொடர்ந்தேன்.

ஆரம்பத்தில் வீட்டுக் கவலை, விடுதிச் சாப்பாட்டில் விருப்பமின்மை தோன்றினாலும் படிப்படியாகச் சரிவரப் படிப்பில் ஊக்கம் கொண்டேன். சின்னமுத்து, நெருப்புக் காய்ச்சல் செங்கமாரி மாறி மாறி என்னை வாட்ட ஐயா அவ்வப்போது வந்து விடுதியிலிருந்து வீட்டுக்குக் கூட்டி வந்து வைத்தியமும் செய்வித்து விடுபட்ட பாடங்களையும் சொல்லித்தர எதிர்நீச்சல் போட்டு S.S.C. சித்தியடைந்து H.S.C.யும் படித்தேன். பல்கலைக்கழக வாய்ப்பு முதல் அமர்வில் கிட்டவில்லை. இரண்டாவது முறையும் தோற்றும் படி ஐயா வற்புறுத்தினார். அடிக்கடி வந்த நோய்களால் விரக்தியுற்று தொடர்ந்து படிக்கவில்லை. ஐயாவுக்குக் கவலைதான். ஐயாவின் கவலையைப் போக்க ஒரே வழி நான் உத்தியோகம் ஒன்றைத் தேடிக்கொள்வதுதான் என முடிவெடுத்தேன். எழுதுவினைஞர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்து கொழும்பிலுள்ள இலங்கை மின்சாரத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் 1968 செப்ரெம்பர் 1ம் திகதி கடமையைப் பொறுப்பேற்றேன்.

முதலாவது மாதச் சம்பளம் C.L.A.+ S.L.A. படிகள் உட்பட ரூ.250.00. பெற்றதும் ஐயாவை மகிழ்விக்க விரும்பி அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ.100 ஐ அனுப்பினேன். பிரதிபலன் - ஏச்சுத்தான்! சம்பளத்தில் மிகுதி 150 ஐ வைத்துக் கொண்டு ஒருமாத கொழும்புச் சீவியத்துக்கு என்ன செய்யப் போகிறாய்? அலுவலகத்தில், தங்குமிடத்தில் நீ பிறருக்குச் சோடை போகாமல் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும். நல்ல மாதிரி உடை அணிய வேண்டும். நல்லபடி சாப்பிட வேண்டும். எனக்கு ரூ.75 அனுப்பினால் போதும்'' என்று கரிசனையோடும் கண்டிப்போடும் கூறினார். ஒன்றரை வருடங்கள் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது ஏற்கனவே தோற்றியிருந்த ஆசிரியர் ஆட்சேர்ப்புப் பரீட்சை முடிவுகளின் படி ஆசிரிய நியமனக் கடிதம் வீட்டுக்கு வர ஐயா விடயத்தை எனக்குத் தெரிவித்து ''நீ யோசித்து முடிவெடு எழுதுவினைஞரா? ஆசிரியரா? நான் உன்னை வற்புறுத்தமாட்டேன்'', என்று சுதந்திரம் தந்தார். அலுவலகத்தில் சில மூத்த எழுது வினைஞர்களிடம் கேட்டபோது, உம்மை மூன்று வருடத்துக்கொரு முறை நாட்டின் பல இடங்களுக்கு இடம் மாற்றுவார்கள். சம்மதமா? (அப்போது மத்திய அரசசேவை. மாகாண சேவை இல்லை) ஆசிரியவேலை உமக்கு ஊரோடுதானே. ஊரில் கமபுலம் இருக்குமே. மத்தியானத்துடன் பாடசாலை முடிந்துவிடும். அதை விட சித்திரை, ஆவணி, மார்கழி மாத லீவுண்டு. என்றதும் நான் ஆசிரிய வேலைக்கு முடிவெடுத்து அதை ஐயாவுக்குத் தெரிவித்த போது தான் அவர், ''நானும் அவர்கள் சொன்ன மாதிரியே எல்லாம் நினைத்து மகிழ்ந்தேன். ஆனால் அதை உனக்குள் திணிக்க விரும்பவில்லை'' என்றார்.

1970 தை மாதம் ஆசிரியர் நியமனம் பாரம் எடுத்தேன். நிலாவெளி மெ.மி.த.க.பாடசாலையில் இரண்டு தவணைகள் பல்லைக் கடித்துக் கொண்டு ஆவணி லீவில் கல்விக் கந்தோருக்குப் போய் இடமாற்றம் கேட்டேன். ''நியமனம் கிடைத்து இரண்டு தவணையோடு மாற்றம் கேட்கிறீரே என்ன பிரச்சினை?'' என்று பிரதம எழுதுவினைஞர் கேட்க, ''அந்தத் தலைமையாசிரியருடன் என்னால் வேலை செய்ய முடியாது.'' என்றேன். அவர் சற்று யோசித்து விட்டு ''இதுவரை எவரும் குறை சொல்லாத உமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதானே தலைமையாசிரியர்," என்றார். "அதுதானே எனக்குப் பிரச்சினை", என்று தொடர்ந்தேன், அதிகாலை 5 மணிக்கே "எழும்பு எழும்பு, குளிகுளி, சாப்பிடு, உடுப்புடு, திறப்பெடு புறப்படு, புறப்படு என்று 8 மணிக்குத் தொடங்கும் நடைத்தூரத்தில் உள்ள பாடசாலைக்கு 7.30 க்கே என்னை விரட்டிவிடுவார். பாடசாலைக்கு யார் பிந்தி வந்தாலும் நான் பிந்தக்கூடாதாம். முன்னுதாரணமாக இருக்க வேண்டுமாம். பிரதம எழுதுவினைஞர் சிரித்து விட்டு "இடமாற்றம் பற்றி ஆறுதலாக யோசிப்போம், போயிற்று வாரும்" என்றார். வந்த விடயம் சரிவராது என்று புரிந்து கொண்டு 'வாலைச் சுருட்டிக் கொண்டு' திரும்பி விட்டேன். ஐயா அதன் பின் எப்போ கல்விக் கந்தோர் போனாரோ அவரைச் சந்தித்தாரோ, அவர் ஐயாவுக்குச் சொன்னாரோ, ஐயா அறிந்தும் என்னிடம் எதுவும் கேட்கவில்லையோ எதுவும் இதுவரை அறியேன்.

நான் திருமலை நகரில் வசிக்கும் போது 1990ல் நிலாவெளியிலிருந்து பலரும் இடம்பெயர்ந்து செல்ல ஐயாவையும் அம்மாவையும் அழைத்து வந்து என்னுடன் வைத்திருந்தேன். ஐயாவுக்கு எனது பிள்ளைகள். எனது மைத்துனர்மார் அவர்களது பிள்ளைகள் நல்ல பொழுது போக்காக இருந்தார்கள். சிறுவர்களுக்கேற்ற கதையும் சொல்வார். பெரியவர்களுக்கும் இராமாயணம் பாரதம் சொல்லுவார். ஐயாவும் அம்மாவும் மருமகளின் சமையல்பாகத்திலும் உபசரிப்பிலும் மகிழ்ந்திருந்தாரகள். மருமகளாகப் பார்க்காமல் தமது பிள்ளைகளில் ஒருவராகவே பார்ப்பதால் "பிள்ளை" என்றே அழைப்பர்ரகள். முத்துக்குமரன் ஆலயத்தில் ஆனி உத்தரம் முதல் ஆவணி மூலம் வரை கந்தபுராணமுற்றோதல் செய்வார். கந்தசஷ்டி காலத்தில் சூரபன்மன் வதைப்படலம் பயன் சொல்வார்.

நான் ஆங்கில ஆசிரியராகி, சேவைக்கால ஆலோசகராகி, அதிபர் சேவையிலிருந்து, பின்பு இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் உதவிக் கல்விப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளராகியதெல்லாம் கண்டதன் மூலம் தான் என்னைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிட்ட பெரும் திருப்தியும் மகிழ்ச்சியும் பெருமையும் அவருக்கு ஏற்பட்டு விட்டது.

ஐயா என் கண்ணூடே, என் நெஞ்சோடே, என்னோடே!

அவையத்து முந்தியிருக்கச் செய்த ஐயாவின் ஆத்ம சாந்திக்கு ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மகன்,**
**கெ.சித்திரவேலாயுதன்**
*(ஐயாவின் பெரியதம்பி)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையாரின் வாழ்வின் நிறைவுக்கட்டம்

எமது குடும்பப் பெருந்தலைவர் தந்தையின் நிறைவான வாழ்வின் நிறைவுக்கட்டத்தைப் பகிர வேண்டியவனாகின்றேன். தந்தையாருக்கு இடையிடையே சளித்தொல்லைதான் ஏற்படுவதுண்டு. 3 - 4 நாட்களுள் சுகம் வரும். 2020 மார்கழிக் கடும் மழையின் போதும் இடையிடை சிறிய அளவில் சளி ஏற்பட்டது. உரிய மருந்தோடு சுகமாகி விடும். 12.02.2021 வெள்ளி பி.ப 3.30மணியளவில் குளிராகவுள்ளது என்றார். காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. பனடோல் கொடுக்கப்பட்டது. பி.ப 6.00 மணியளவில் நான் தொட்டுப்பார்த்த போது "காய்ச்சல் விட்டிட்டுது" என்று சொன்னார். பகல் சோறு, கறி கடைந்து கொடுத்து சாப்பிட்டவர். இரவு ஒன்றும் வேண்டாம் என்றார். 13.02.2021 சனிக்கிழமை அதிகாலை இருமல் தொடங்கியது. சளிக்குரிய குளுசையும் பாணி மருந்தும் கொடுத்தேன். அதன் பின் சளிவரத் தொடங்கிற்று. வழமைபோல் தானே உரிய பாத்திரத்தினுள் துப்புவதும் துடைப்பதுமாக இருந்தார். மனமில்லை என்று உணவை மறுத்தார்.

பி.ப 6.00 மணியளவில் மருத்துவர் வந்து பார்வையிட்டு சளி பெரிதாக இல்லை 3 நாட்களில் மாறிவிடும். நாடித்துடிப்பு குறைந்துள்ளது எனக் கூறிவிட்டு சளிக்கு மருந்து எழுதித் தந்தார். பாணி மருந்தில் குளுசை கரைத்துக் கொடுக்கப்பட்டது. இரவு 7.00 மணிக்குப் பின்னர் "கதிர்காமம் வந்திட்டன், கதிர்காமம் வந்திட்டன் - கதிரேசா கதிரேஸ்வரம்....." என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

இரவு 8.00 மணியளவில் எனது மகள் வாசுகி பேரனிடம் கதை கேட்ட போது கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதார். மகள் சென்ற பின் எனது கைகளைப் பிடித்துக் கொண்டு "ஓரிடமும் போகாதே" என்றார். நானும் மனைவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் நிற்க "பிள்ளைகள் அங்கால போங்கோ" என்றார். "ஏன்" என்று அவர்கள் கேட்டதும் "நான் போகப்போறன்" என்றார். "எங்க போகப் போறியள்" எனக் கேட்டனர். "சிவலோகம் தான்" என்றார்.

இரவு 9.30 அளவில் இருமலின் இடையே "வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்......" என்ற பட்டினத்தார் பாடலை மெதுவாகப் பாடினார். தனது வாழ்வு நிறைவடையப் போகின்றது என்பதை அறிந்தே – போகப்போறன் என்று கூறியதுடன் பட்டினத்தார் பாடலும் பாடியுள்ளார். அப்போது நாம் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இரவு 10.30 அளவில் "விலாப்பக்கம் சித்தாலேப பூசிவிடு நோகுது" என்றார். பூசிவிட்டேன். "களைத்துப் போனீங்கள் நெஸ்ரமோல்ட் குடியுங்கள்" என்றேன். ஓம் என்றார். சிறிதளவு சிறிதளவாக அரை டம்ளர் நெஸ்ரமோல்ட் குடித்தார். 11.00 மணியளவில் இருமல் குறைந்து நித்திரையாகிக் கொண்டிருந்தார். அந்நேரம் திருமலையில் இருந்து அண்ணா தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்தார். இப்பதான் நெஸ்ரமோல்ட் குடித்து விட்டு நித்திரையாகிறார் என்றும் - மருத்துவர் வந்து பார்த்தமை பற்றியும் கூறினேன். "நீங்களும் கொஞ்சநேரம் படுங்கோ" என்று கூறி தொலைபேசித் தொடர்பை துண்டித்துக் கொண்டோம்.

அப்பாவைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். மூச்சு விடுவது குறைவது போல வயிற்றுப் பகுதி காட்டியது. இவ்வேளை எனது மனைவியும் உள்ளே வந்தார். கைவிரல்கள் வயிற்றின் மேல் தாளம் போட்டுக் கொண்டிருந்தன. வயிற்றுப் பகுதி அசைவின்றி குளிர்ந்தது. விரல்களின் அசைவும் நின்றது. ஐயா! ஐயா! என்று கூப்பிட்டுப் பார்த்தேன். அசைவில்லை, மகள் வந்து நாடியைப் பிடித்துப் பார்த்தாள். துடிப்பில்லை. "அப்பப்பா போயிற்றார்" மனைவி கூறினார். நிதானமாக கதைத்துக் கதைத்து இறப்பை எதிர் கொண்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரையாகிறார் என நாம் நினைத்தோம் அவர் மீளா நித்திரையில் ஆழ்ந்து விட்டார். 15.03.2021 அன்று 107 ஆவது பிறந்தநாளைக் கொண்டாட இருந்த எமக்கு பேரதிர்ச்சி. பிறந்த நாள் அன்று வீட்டுக்கிருத்தியம் வரத்தக்கதாக திட்டமிட்டு சென்று விட்டார்.

ஓம் சாந்தி சாந்தி

மகன்,
கெ. தவராசா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் நினைவுகளில் கலந்து....

வீட்டில் "அ" சொல்லித்தந்தவரும் எந்தன் தந்தையே . பாடசாலையிலும் "அ" சொல்லித்தந்தவரும் எந்தன் தந்தையே. மாதா, பிதா, குரு, தெய்வமாக அத்தனையும் ஒன்று சேர வாய்க்கப் பெற்றேன். எனது மனைவியாரும் என் தந்தையிடம் கல்வி கற்கும் பாக்கியம் பெற்றவர் ஆவார்.

நான் எட்டாம் வகுப்புப் படிக்கும் காலத்திலேயே என்னை நிலாவெளி சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அழைத்துச்சென்று தான் பாடும், பயன் சொல்லும் கந்தபுராண படலத்தினைக் கேட்கவைப்பார். வீட்டில் உள்ள கந்தபுராணப் புத்தகத்தினைத் தந்து, என்னைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். பயன் சொல்வதற்கு எவ்வாறு பிரித்துப் படிக்க வேண்டும் என்பதையும் சொல்லித் தந்து, எனது பன்னிரண்டு வயதிலேயே மேற்குறித்த ஆலயத்தில் என்னைப் பாட வைத்தார்.

யுத்தகாண்டப் படலத்தின் அத்தனை பாடல்களும் மனப்பாடமாக அவரின் இறுதிக்காலம் வரையிலும் ஞாபகமாக வைத்திருந்தமை என்னை மட்டுமல்ல எல்லோரையும் அதிசயிக்க வைத்தது. பாடசாலையில் படிப்பிக்கும் காலத்தில் மாணவர்களிடம் பனை ஓலை கொண்டுவரும்படி சொல்லி கைப்பணி பாடத்தில் பெட்டி, பாய், நீத்துப்பெட்டி என்பன இழைக்கச் சொல்லிக் கொடுத்து பழக்குவார். கிடுகு இழைக்கவும் பழக்குவார். இவற்றினை என் சிறுவயதில் வியப்புடன் பார்ப்பேன்.

வீட்டில் உள்ள சின்ன சின்ன மேசன் வேலைகள் தச்சு வேலைகள் என்பனவற்றைத் தானே செய்யும் திறன் கண்டு களிப்பேன். நான் எங்கள் குடும்பத்தில் கடைசிப் பிள்ளை என்பதால் என் மேல் அதிக அன்பும் பாசமும் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உதாரணமாக எனது பதினோரு வயதில் பாடசாலையில் படித்துக் கொண்டிரிருந்தபோதில், எனக்குத் திடீரென வயிற்றுவலி ஏற்பட்டது தாங்கமுடியாத வேதனையில் நான் அழுதபோது உடனே தான், கற்பித்து கொண்டிருந்தத்தையும் நிறுத்திவிட்டு என்னைத் தூக்கிக்கொண்டு சுமார் அரைக் கிலோ மீற்றருக்கும் அதிகமான தொலைவிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று மருந்து எடுத்துக் கொடுத்தார். இவ்வாறாக அதிக அன்பும் பாசமும் வைத்து என்னை செல்லமாக வளர்த்ததனால் குழப்படி காரனாக சிறுவயது முதல் இருந்துவந்தேன் நான் செய்யும் தவறுகளை எல்லாம் மன்னித்து விடுவார்.

எனது பதினாறாவது வயதில் சுகவீனம் உற்றிருக்கும்போது என்னை இணுவிலுக்கு அழைத்துச் சென்று தனது இறுதிக்காலத்தைக் கழித்த அதே வீட்டில் தங்கி சுமார் ஒரு மாதம் வரை காரைக்கால் அம்மன் கோவில் பூசகரும் வைத்தியருமான ஐயரிடம் தமிழ் வைத்தியம் செய்து குணப்படுத்தினார். அப்போது அவர் எனக்காகப் பட்ட மனவேதனை, கஷ்டம் என்பனவற்றை அடிக்கடி எண்ணிப்பார்த்து மனம் கசிந்து போவேன்.

நான் திருமணம் செய்த பின்னர் எனக்குச்சொன்ன அறிவுரை “கடையில் கொப்பி வைத்து கடன் பட்டு, பொருட்கள் வேண்டாதே. அது அதிக செலவைக் கொண்டுவரும் .காசைக் கொடுத்தே பொருட்களை வேண்டு” என்றார் . அன்றிலிருந்து இன்றுவரை எந்தக்கடையிலும் கடனுக்குப் பொருட்கள் வேண்டியதில்லை. அதனால் பணத்தைச் சேமித்து மகிழ்வாய் வாழுகின்றோம்.

ஆலயங்களில் தேவார புராணங்கள் பாடும்போது அதன் பொருள் உணர்ந்து மனமுருகிப் பாடுவார். பக்தர்களும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தத்தைப் புரிந்து கொள்வார்கள். எனவே சிவபுராணத்தில்

"தில்லையிற் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச்சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் சொன்னதுபோல, எங்கள் தந்தையாரின் ஆத்மா இறைவன் அடியில் சாந்தி பெற்றிருக்கும் என்று பூரணமாக நம்பி மனக்கவலை நீங்கி வாழ்வோமாக.

சுபம்

மகன்
கெ.தர்மகுலராசாவும் குடும்பத்தினரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான என் அண்ணே...!

எனக்கு ஐந்து வயதில் அப்பு காலமாகிவிட்டார். அந்தப் பருவத்திலிருந்து அப்பாவுக்கு அப்பாவாய், நல் ஆசிரியராய், அன்பான அண்ணனாய் என்னை ஆளாக்கினீர்கள். எனக்கென்று இருந்த ஒரே ஒரு சகோதரம் நீங்கள் தான் அண்ணா. ஏடு தொடக்கி எழுத்து சொல்லிக் கொடுத்தது முதல் வாழ்க்கையில் ஒவ்வொரு விடயத்தையும் நீங்களே சொல்லி வளர்த்தீர்கள். சின்னவயசில் நீங்கள் எனக்குச் சொல்லித் தந்த தேவார திருவாசகங்கள் தான் நான் இப்பொழுதும் கோயில்களில் படிக்கிறேன்.

சாவுகளும் சடங்குகளும் உங்கள் மரணத்தை ஏற்றாலும், அண்ணே நீங்கள் இல்லை என்ற உணர்வை நான் ஏற்கவில்லை. இப்பவும் யாழ்ப்பாணம் ஒரு தரம் போய் வரவேண்டும் அண்ணனைப் பார்க்க என்று எண்ணி சிந்தை தெளிந்தபின் விம்மி அழுகிறேன். என் மன ஆறுதலுக்காக "அண்ணருக்கு போகிற வயது சரிதான்" என்று மற்றவர்கள் சொன்னாலும் நான் இன்னமும் உங்களுக்கு சின்னப் பிள்ளைதான். ஏன் அண்ணே என்னை விட்டுப் போனீங்கள்....


2013 ல் நான் இந்தியாவில இருந்த போது நீங்கள் கடுமையான சுகயீனமாய் திருநெல்வேலி ஆஸ்பத்திரியில இருப்பதாகக் கேள்விப்பட்டு துடியாய்த் துடித்து உடனே பிளேன் எடுத்து வந்து உங்களைப் பார்த்து நீங்கள் சுகமடைந்த பின்பு தான் நிம்மதி அடைந்தேன். இப்போதும் இடைக்கிடை "எனக்காக செய்தி ஏதாவது சொல்லி அனுப்பினாரா அண்ணே" என்று கேட்கும் போதெல்லாம் அவர்கள் சொல்லுவது" அவரை சாப்பாட்டைக் குறைக்கச் சொல்லு" என்ற தகவல் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிடைக்கும். நானும் சொல்லுவன் "இத மட்டும் சொல்லாதீங்க'என்று. இனி எனக்கு யார் இருப்பார் இப்படி அதிகாரமாய் அறிவுரைகள் சொல்ல. நெஞ்சம் ஏற்கவில்லை நினைவு மறக்கவில்லை...உங்கள் ஆத்மா சாந்தியடைய சித்தி விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.

உங்கள் பிரிவால் கலங்கும்
தம்பி. கனகரெத்தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தறிவித்த எம் இறைவன்...

அரிசியிலே அகரம் இட்டு
ஏடு தொடக்கி எழுத்தறிவித்த - எம்
முதல் ஆசான்...!

சுட்டுவிரல் நீர் பிடித்து வட்டெழுத்தாய் எழுதிடவே
விரல் தொட்டு விட்ட கணம் - இன்றும்
பச்சை மரத்தாணியாய் - நெஞ்சில்
பதிந்தது காண் - நிந்தன் தேகம்
சுடர் சுட்டெரிக்கப் பார்க்கையிலே நெஞ்சம்
சிவந்தது காண்..

கோணமலைக் கரையினிலே
நிலவூராம் நிலாவெளியில் வந்துதித்தீர்
ஊருக்கு உத்தமராய்
உன்னத வாழ்வு கொண்டீர்
கல்வியிலே கரைகள் பல கண்டு
கலைகளுக்கு எல்லாம் ஓர் "என்சைக்ளோபீடியா" நீங்கள்
வேண்டிய வரலாறு எல்லாம் - விபரமாய்
விபரிக்கும் எங்கள் வீட்டு "விக்கிபீடியா" நீங்கள்

அத்தனைக்கும் அளவு கொண்டீர் - எண்ணியே நின்
வயதிற்கேற்போல் வாழ்க்கையை வகுத்துக் கொண்டீர்
அன்னம் அளவுடன் ஆசை அளவுடன்
சொல்லும் சொல்லும் அளவுடன்
செய்யும் செயலும், சேர்த்த செல்வமும் அளவுடன் - என
அத்தனைக்கும் அளவு கொண்டீர் - ஆதலால் தானோ
அளவு கடந்த ஆயுள் கொண்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசைகள் தளர்ந்த போதும்
தன்னம்பிக்கை தளர்ந்ததில்லை
நிற்கின்ற நிலை குன்றிய போதும்
நினைவாற்றல் குறைந்ததில்லை
நூற்றாறு ஆண்டு கடந்த போதும் - நீவீர்
நிதானம் தான் இழக்கவில்லை

சைவத் தொண்டு நிதம் செய்து
சிவ வாழ்வு வாழ்ந்திட்டீர்
தள்ளாடும் வயதினிலும் தளராது
சொன்னீர்கள் கந்தபுராணப் பயன்
பயன் சொல்லிக் கண்ட பயன் தானோ
கந்தன் திருவடிக்கே சென்று விட்டீர்
அங்கிருந்து அவன் புகழ் பாட

மரபில் வந்தோரெல்லாம்
மாண்புறவே வாழ வைத்தீர்
கலையென்ன கல்வியென்ன - நாம்
பெற்ற பேறுகள் அத்தனையும் நின்
மரபணுவால் வந்ததன்றோ

வாய்ப்பாடு முதல் வாழ்க்கைப் பாடம் வரை
ஒவ்வொன்றாய் எமக்கு உரைத்தீர் - நின்
வாழ்வையே பாடமாய் வாழ்ந்து காட்டி
வானுயரச் சென்று விட்டீர்

என்ன தவம் நாம் செய்தோமோ - நின்
மரபில் நாம் பிறக்க - நின்
திருப்பாதம் தொட்டு ஆசி பெற...
இன்னும் எப்பிறப்பெடுப்பினும்
என்றும் உங்கள் ஆசி வேண்டும்.

**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவா நிஜமா ?

சொந்தப் பெயர் மறந்துபோய்
ஊரெல்லாம் உறவுமுறைப் பெயர் ஒன்றே.
இவர் பெயர் ஆனதே எல்லோர் வாயிலும்
**பெ ரி யை யா**

எனக்கோ உறவு முறைப் பெரியையா.
இவர் எங்களுக்கு இன்னுமொரு பேஸ்புக்
எமது ஊரின் எல்லா சின்ன முகங்களையும்
"அட்" பண்ணி வைத்திருப்பார்.

இவர் எங்கள் ஊரின் இன்னுமொரு சச்சின் டென்டுல்கார்
வாழ்க்கைக் கிரிக்கெட்டில் செஞ்சறி போட்டவர்.
இவர் எங்கள் ஊரின் இன்னுமொரு கவிஞர் வாலி
மூன்று தலைமுறைக்குக் பாட்டெழுதியவர் கவிஞர் வாலி.
இவர் மூன்று தலைமுறைக்கு
அகரம் சொல்லிக் கொடுத்தவர்.

வெளிநாட்டிலிருந்து போபவர்கள்
பார்த்து விட்டுவர ஆசைப்படும் - இவர்
இன்னுமொரு பிரான்ஸ் ஈபில்ரவர்
இன்னுமொரு கனடா நயாக்கரா
இன்னுமொரு லண்டன் பென்ரகன் கடிகாரம்
இன்னுமொரு இத்தாலிச் சாய்ந்த கோபுரம்
இன்னுமொரு எகிப்திய பிரமிட்டு
இன்னுமொரு இந்திய தாஜ்மகால்
இன்னுமொரு சீனப் பெருஞ்சுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் இவர் எங்கள் ஊரில்
எல்லோரும் வெளிநாட்டில் இருந்து போனால்
பார்த்துவிட்டே வரவிரும்பும் எட்டாவது பேரதிசயமாம்.

என் விரல் பிடித்து ஏடு தொடக்கி
அகரம் போட்டவர்
காலமானார் என்பதும் கனவு
என்றே விழித்தேன் முழித்தேன்

கனவல்ல நிஜம் என்றே கண்ணீர் துடைத்தேன்
வந்தவர்கள் போவதும் போபவர்கள் அழுவதும்
எப்பவோ முடிந்த விசயம் எப்பவுமே
இது மட்டுமே நிஜம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**கனகரெத்தினம் கைலைநாதன்**
**(நிலாவெளிக் கைலை)**
**பிரான்சிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆலமரமே

என் பாட்டன் உடன் பிறந்தாள் மகனாய்ப் பிறந்தீர்
எல்லோர்க்கும் நல்லோனாய் வாழ்ந்தே யிறந்தீர்
இன்றில்லை இங்கென்று எண்ணும் போதும்
இருக்கின்றீர் நெஞ்சுக்குள் என்பதே உண்மை
புன்னகையைக் கூட்டியள்ளி வைத்தேன் ஐயா
பூத்திருப்பீர் என்றுமுளக் கூட்டுக் குள்ளே
சென்ற வழித்தடமெல்லாம் எண்ணி யெண்ணித்
தேடுகின்றேன்! நின்பாதம் தொழுதேன் ஐயா!

ஆலமரம் போலிருந்தே அறத்தின் நெறிகள்
அத்தனையும் கூறி வைத்த வேந்தன் நீரே!
சோலைமரத் தேர்ந்தெடுத்துத் தேவர் கூடிச்
சொர்க்கபுரி வாசலினை அலங்க ரித்து
மாலையிட்ட நின்மார்பைத் தான ணைப்பார்
மகிழ்ச்சியினில் நின்மனதும் நீந்தக் கண்டேன்
காலமெல்லாம் எம்மோடு தானி ருப்பீர்!
காலடியில் மலரிட்டுத் தொழுதேன் ஐயா

**உங்கள் நினைவோடு**
**வ.க.பரமநாதன்**
(அமரரின் தாய்மாமனான நாடக மன்னன் ப.நாகலிங்கம் அவர்களின் பேரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Noble Character

Our dearest Uncle
Mr. K.Kejaretnam


The demise of our dearest uncle late K.Kejaretnam caused us a terrible shock and grief. We couldn't trust our ears. What a sad occasion for all of us both young and old, big and small mourned the death of this great personality. The villages Nilaveli and Manchathady Inuvil were plunged into a sea of sorrow. We lost the kindest uncle and a kindest human. He was a Unique human who lived to the ripe old age of 107.He lived for others and not for himself "Service to humanity is service to God" was his motto. He did a world of good to the community and was, respected and admired by all the people of Nilaveli and Inuvil. He was the former principal of Nilaveli Mahavidyalayam. He was a role model for his contemporaries. He was a well read person in Tamil and Hindu religion, and a Murugan devotee. He had produced many eminent personalities.He had a great love and concern for me and for my wife. He affectionately called me " Achcha mama" and affectionately called my wife, "Linga". His kind words are still echoing in our ears. Three weeks before he died, I visited him, sang murugan songs and delighted him with murugan songs. He was highly taken up by my songs. His death was a great loss to the entire Tamil community. His selfless and dedicated service will be remembered by all with love and gratitude. Man is mortal but his good deeds and kinds are immortal everlasting.

May his soul rest in peace!

**Nephew**
**K.Rasanayagam**
**Rtd English Teacher ( Kondavil)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அகவை நூறு ஆன போதும் தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியுடன் எழுதிய இந்நூலின் கையெழுத்துப் பிரதி**

பெரியையாவின் அழகிய கையெழுத்தில்....



**பெரியையா அவர்கள் எழுதிய "நிலாவெளி - வரலாறும் பண்பாடும்" எனும் நூல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனது 100வது பிறந்தநாளை ஒட்டி வீரகேசரி பத்திரிகைக்கு அமரர் திரு. க.கெஜரெத்தினம் அவர்கள் வழங்கிய செவ்வியில் இருந்து...


### இன்றைய சந்ததிக்கு ஒரு பெரியவராக, மூத்தறிஞராக உங்களின் அறிவுரை

கல்விச் செல்வமே வாழ்க்கையில் முக்கியமான செல்வமாகும். இளமையில் கல் சிலையில் எழுத்து என்பதற்கேற்ப இளைஞர்கள் கல்வியில் மிகுந்த சிரத்தை எடுக்க வேண்டும். தமிழ்க்கல்வி தற்காலத்தில் அருகி வருவது போன்று உணர்கிறேன். பிள்ளைகளுக்கு தமிழ்க் கல்வியை கற்றுக் கொடுப்பது பெற்றோர்களினதும் பொறுப்பாகும். சிறந்தகல்வி எனப்படுவது ஒழுக்கத்துடன் கூடிய கல்வி ஆகும். பஞ்சமாபாதகங்கள் என்று சொல்லப்படுகின்ற கொலை, களவு, கள், காமம், குரு நிந்தனை என்பன தவிர்க்கப்பட வேண்டும்.இதில் ஏனையவற்றையும் தூண்டக்கூடிய கள் எனச் சொல்லப்பட்ட மதுப்பாவனை இன்று இளைய தமிழ் சமுதாயத்தில் அதிகரித்து வருவது கவலைக்குரியதாகும். இது நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

அது போன்று தேக ஆரோக்கியம் முக்கியமானதாகும். இன்றைய நவீன உலகில் உடற்பயிற்சிக்கு நேரம் இன்றி இளைஞர்கள் தொழிநுட்ப வளர்ச்சிக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து இளையதமிழ் சந்ததியினர் கல்வியில் கவனமெடுத்துக் கொள்வது முக்கியமாகும். ஒழுக்கத்துடனான கல்வி, சிறந்த தேக ஆரோக்கியம், சொல்லிலும் செயலிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சிந்தனை இவை இருந்தால் இறையருளுடன் நூறாண்டுகள் சிறப்பாக வாழலாம். இந்ததருணத்தில் தெய்வங்களாக இருந்து என்னை வாழவைத்த எனது பெற்றோர், எனக்கு கல்வி புகட்டிய ஆசான்கள், உறுதுணையாக இருந்த ஊர் மக்கள், உறவினர்கள் அனைவரையும், எல்லாம் வல்ல இறைவனையும், இயற்கையையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். க. கெஜரெத்தினம் அவர்கள் சமயப் பணியிலும் கந்த புராண படனத்திலும் மிகவும் அக்கறை கொண்டு வாழ்ந்ததால் அவரது நினைவாக தேவாரத் திருப்பதிகங்களும் கந்தபுராணம் தொடர்பான கட்டுரைகளும் இந்நூலில் பதிவிடப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவெளி சித்தி விநாயகர்
## ஊஞ்சல் பாட்டு

சீருலவு செம்பவளத் தூண்கள் நாட்டித்
திகழுமெழில் மரகதத்தால் விட்டம் பூட்டிப்
பேருலவு நிலத்திலச் சங்கிலிகள் மாட்டிப்
பிரபை மிகு தமனியப் பொற்பலகை யோட்டி
ஏருலவு மலங்கிர்தப் பொன்னூஞ்சல் மீதே
இருந்து நிலா வெளியதனில் இனிதாய் வாழும்
வாருலவு கனதன வல்லபையின் பாகம்
மருவு சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல்.

இந்திரனு மலரயனும் பாதம் தாங்க
இருபுறமும் பூதகண நாதர் தேங்க
வந்தடியார் கரங்குவித்துப் போற்றி செய்ய
வானவர்கள் புட்பமழை மகிழ்வாய்ப் பெய்ய
அந்தர துந்துபிகள் ஐந்துமிருந் தொலிக்க
அரிய ரத்னக் கழல்களிற் கிண்கிணி கலிக்கச்
சுந்தரமார்ந் திலகு நிலாவெளியில் வாழுந்
துய்ய சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல்.

அன்னை தந்தை பார்த்து மனங் களிப்புக் கொள்ள
அரிய மறை வேதியர்கள் ஆசி விள்ளத்
தன்னிகரிலா மகளிர் கவரி போடச்
சண்முகவேல் மனைவியரோ டருகினாட
மின்னுசந்ர சூரியர்கள் கவிகை தாங்க
மிகுமடியார்கள் துதிக்குமொலி யெங்கு மோங்க
வன்னமுறு நிலா வெளியி லினிது வாழும்
வல்ல சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்புயஞ்சேர் நாரதர் யாழினை மீட்ட
மலர்மகளும் கலைமகளும் வடந்தொட்டாட்டப்
பொற்புலவு மயிராணி கவாசி நீட்டப்
பொன்னுலக வரம்பைய ராலாத்தி காட்டக்
கற்பகலா மடமகளிர் இனிது வாழுங்
கவினிவரு நிலாவெளியி லிருந்தெந் நாளும்
அற்பு தமா யடியவருக் கருள் பாலிக்கும்
ஆதி சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல்.

அட்ட திக்கி லுள்ளவர்கள் பணிசெய் தேத்த
அரவணையில் துயில்மாயன் மகிழ்ந்து போற்றக்
கட்டழகார் அரம்பையர்கள் நடனமாடக்
கந்தமலர் மாலையில் வண்டிசைகள் பாட
எட்ட நின்று முனிவர் பல்லாண்டு கூற
இருபுறமும் தொண்டர்குழாம் நெருங்கி மீற
மட்டவிழு நிலாவெளியூர் தன்னில் நாளும்
மருவுசித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல்

ஆதிமறை முதற்பொருளே யுமையா ளீன்ற
ஐங்கரனே யன்பர்தமக் கருள் பாலிக்கும்
கோதில் குணக்குன்றே யங்குச பாசங்கைக்
கொண்டவனே யடியருளக் கோயில் வாழும்
பாதிமதி தரித்தசிவ பெருமான் பெற்ற
பாக்கியமே யெனவெவரும் பரவிப் போற்ற
நீதிபிறழாத நிலாவெளியில் வாழும்
நித்திய சித்தி விநாயகரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைபுரிந் தமரர்தமை முன்னாட் காத்த
கயமுகனைச் செற்றவரே யாடி ரூஞ்சல்
மருமலர்க்காவில் துணைவன் வள்ளிமாதை
மணமுடிக்கச் செய்தவரே யாடி ரூஞ்சல்
இமையுறுமேரு விற்பாரதத்தைக் கோட்டால்
எழுதிய எம்பெருமானே யாடி ரூஞ்சல்
தருமநெறி நிகழு நிலா வெளியில் வாழும்
தகைகொள் சித்தி விநாயகரே யாடி ரூஞ்சல்.

தங்கரத்ன முடிசிரசி லிருந்தே யாடத்
தயங்கு மெழில் முப்புரிநூல் மார்பிலாடத்
தொங்குதுதிக்கையில் ரத்னக் கலசமாடத்
துலங்கு கின்ற செவிகளிற் குண்டலங் களாடச்
செங்கையுறு மங்குச பாசங்களாடத்
திகழுமணிப் பூஷணங்கள் சிறந்தேயாட
மங்கல வார்ப் போங்கு நிலாவெளி யினாளும்
மருவு சித்திவிநாயகரே யாடி ரூஞ்சல்

சிந்துரவானன மாடச் செவிகளாடத்
திருவருள் செய் விழியாடக் கரங்களாடத்
தொந்தி வயிறசைந் தாடத் துதிக்கையாடத்
துலங்கு மொற்றைக் கோடாடத் தொண்டராடக்
கந்தமலர்ப் பதமாடச் சதங்கையாடக்
கருதுபதினெண் விதமாங் கணத்தோராட
நந்து தவழ் பணைகொணிலா வெளியில் வாழும்
நல்ல சித்தி விநாயகரே யாடி ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவினை தீர்ப்பவரே யாடி ரூஞ்சல்
மலைமகளின் தலைமகனே யாடி ரூஞ்சல்
தந்திமுகத்து மூத்தவரே யாடி ரூஞ்சல்
சண்முகத்து மூத்தவரே யாடி ரூஞ்சல்
முந்துபிரணவப் பொருளே யாடி ரூஞ்சல்
மூஷிக வாகனரே யாடி ரூஞ்சல்
சிந்து புடைசூழ் நிலாவெளியில் வாழும்
செய்யசித்தி விநாயகரே யாடி ரூஞ்சல்

## வாழி

பார்வாழி செந்நெல் விளைபழனம் வாழி
பாவையர்கள் கற்புநெறி பல்கி வாழி
கார்வாழி யானினங்கள் கதித்து வாழி
கருதரிய வேதியரெக்காலும் வாழி
ஏர்வாழி சிவசமயமெங்கும் வாழி
இலங்குமுயிர்த் தோற்ற மெலா மென்றும் வாழி
சீர்வாழி செய்யநிலா வெளியூர் வாழி
சித்திவிநாயகர் கழல்கள் வாழி தானே.

## எச்சரிக்கை

திருவார் நதிமதிசூடிய சிவனுக் கருமகனே
பரிவாயருள் புரிவாய் கணபதியே எச்சரிக்கை
அருமாமறைப் பதியேயடி யவர் தேடியநிதியே
மருமாமலர்க் குழலாளுமை மகனே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொந்திவயிற் றைந்துகரத் தூயா எச்சரிக்கை
சுடர் வேலுடைக் குகனுக்கருந் துணைவா எச்சரிக்கை
மெத்தும் புகழுள்ள நிலா வெளியூர்தனில் வாழும்
பத்தர்க்கருள் சித்திக் கணபதியே எச்சரிக்கை

பராக்கு
பந்தவினை தீர்த்தருள்செய் பவனே பராக்கு
பாலவிலோசன முடைய பகவா பராக்கு
வாமி சிவகாமியருள் மைந்தா பராக்கு
மணியரவிற் றுயிலுமரி மருகா பராக்கு
மாங்கனிக்குத் தந்தை வலம் வந்தாய் பராக்கு
வல்லபையைப் பாகமதில் வைத்தாய் பராக்கு
இத்தரை சொல் மதிவெளியிலினிதாக வாழும்
எழில்மருகு சித்தி விநாயகனே பராக்கு

லாலி
மண்ணுலகும் விண்ணுலகும் வந்து தொழும் பாதா
மணியரவ மணியுமரன் மகிழுமலர்ப்பாதா - லாலிலாலி
அடியவருக் கருள்புரியும் ஆனைமுகத்தையா
அருமறைசொல் மூலமதில் அமர்ந்திருக்கும் தூயா -
லாலிலாலி
வந்தவினை தீர்த்தருளும் வல்லபையின் நேசா
மற்கய முகன்தனைமுன் வதைசெய்தவீசா - லாலிலாலி
சித்திர மிகுந்தநிலா வெளியூரில் வாசா
சித்தி விநாய கிருபை செய்தருள்வாய் - லாலிலாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்

வாரணத்து முகமுடைய வல்லபை மணாளருக்கு
சீர் சிறக்க நிலாவெளியில் சித்திபுத்தி விநாயகர்க்கு -
மங்களம்

அங்குச பாசமுள்ள அணிமருப்பு ஐங்கரற்கும்
மங்கையுமை பாலனுக்கும் மற்றுமுள தேவருக்கும் -
மங்களம்

நித்தநித்தம் நிலாவெளியூர் சித்திதரும் விநாயகனை
பக்தியொடு பூசைபுரி அந்தணர்க்கும் அடியவர்க்கும் -
மங்களம்

கயமுகனைச் சாடியன்று காய்ந்த கணநாதருக்கும்
வயல்வளஞ்சேர் நிலாவெளியூர் வாழும் நல்லமாந்தருக்கும்
- மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராண படனம்

புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவைகளுக்குப் பொருள் சொல்லலும், கேட்டலும் சிறந்த புண்ணியங்களாம் என நாவலர் பெருமான் நாம் அறிந்து உணருமாறு கூறி வைத்துள்ளார். பெரும் பயன் தருவதாகிய புராண படனத்தினை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதனை இன்றும் புராணபடன நிகழ்வின் போது காணக்கூடியதாக இருக்கின்றது. திருக்கோயில், திருமடம், புண்ணிய தீர்த்தக்கரை, சைவாசாரம் உடையாரது இல்லம் முதலிய இடங்களே புராணபடனம் செய்வதற்கு உரிய இடங்களாகும்.

சமய நூல்களைக் கற்றறிந்து, திருமுறைப் பாராயணஞ் செய்கின்ற ஆசாரசீலர்களே புராணபடனஞ் செய்வதற்கு உரியர். ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, அனுட்டானம் முடித்துக் கொண்டே புராணம் படித்தல், பொருள் சொல்லல், கேட்டல் என்பனவற்றைச் செய்தல் வேண்டும். புராணமண்டபம் வெள்ளைகட்டி, தோரணம், மாவிலை, வாழை, கரும்பு முதலியவற்றால் அலங்கரிக்கப்பட வேண்டும். நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கேற்றி, திருமுறைப் பீடத்தில் பட்டுவிரித்து அதன் மேலே புராண நூல்களை வைத்து சந்தனம், புஷ்பம், தூபம், தீபம் முதலியவைகளினாலே விதிப்படி பூசை செய்து, வணங்கி, வடக்கு முகமாக இருந்து ஒருவர் புராணம் வாசிக்க, எதிரே கிழக்கு முகமாக இருந்து ஒருவர் பொருள் சொல்ல வேண்டும். புராணபடனம் ஆரம்பிக்கும் பொழுது கற்பூரம் ஏற்றி, திருச்சிற்றம்பலம் சொல்லி காப்புப் படிக்க வேண்டும். இவ்வாறு காப்புப் படித்தே புராணபடனம் நிறைவாக வேண்டும்.

புராணங்கள் விருத்தயாப்புப் பாடல்களாகவே இருப்பதாற் போலும் தோடி இராகத்திற் புராணபடனம் ஆரம்பிக்கப்படுகின்றது. வல்லவர்கள் பொருளிற்கும் காலத்திற்கும் ஏற்ற இராகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது எடுத்துக் கொள்வர். மத்தியமாவதி இராகத்தில் நிறைவு செய்வது பாரம்பரியமாக உள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் புராணபடனத்திற்காக அரும்பாடு பட்டிருக்கின்றார். கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய பல நூல்களை வெளியிட்டிருக்கின்றார். உரை சொல்வதில் மிகவும் வல்லமை பெற்ற வித்துவ சிரோன்மணி ந.பொன்னம்பலபிள்ளை முதலிய பல உரைவல்லாரை உருவாக்கி இருக்கின்றார். அவர் காலத்திலிருந்து புராணபடனம் தொடர்ந்து நடைபெறுகின்றது.

நாவலரின் மருகரும் மாணவருமாகிய வித்துவ சிரோன்மணி ந.பொன்னம்பலபிள்ளை, மட்டுவில் ம.க.வேற்பிள்ளை, இணுவில் அம்பிகைபாகர், இணுவில் நடராசையர், விளிசிட்டி அம்பலவாண உபாத்தியாயர், முருகேசபண்டிதர், சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலய குருக்கள் தம்பி ஐயா, விளிசிட்டி ஆறுப்பிள்ளை, கொக்குவில் த. குமாராசாமிப் புலவர், கொக்குவில் சின்னத்துரை, மல்லாகம் பண்டிதர் கா.நமசிவாயம், பண்டத்தரிப்பு குமாரு, ஏழாலை வே.தம்பையா உபாத்தியாயர், சி.வைத்திலிங்கம், மு.சிற்றம்பலம், சி.கந்தப்பசேகரம்பிள்ளை, மு.ஞானப்பிரகாசம், செ.சின்னத்துரை, பண்டிதர் மு.கந்தையா, சி.சண்முகவடிவேல், அச்செழு அருணாசலம், மட்டுவில் சங்கரப்பிள்ளை, ஆவரங்கால் பண்டிதர் சு.சுப்பிரமணியம, க.சி.நடராசா, இணுவில் பண்டிதர் இ.திருநாவுக்கரசு, பண்டிதர்.வே.சண்முகலிங்கம், மு.வேலாயுதபிள்ளை, சரசாலை ச.பேரம்பலம், கல்வயல் விநாசித்தம்பி, சுழிபுரம் க.கார்த்திகேசுயோகி, கரவெட்டி பிள்ளைக்கவி க.சிவராசசிங்கம், ஏழாலை சைவப்புலவர் ச.சச்சிதானந்தசிவம், தாவடி செ.சிவப்பிரகாசம், அளவெட்டி கதிரேசர்பிள்ளை, தெல்லிப்பளை வ.குகசர்மா, தெல்லிப்பழை நாகலிங்கம் நவாலித் தம்பையர் போன்றோர் புராணபடனத்தில் மிகவும் சிறப்பாக பங்களிப்புச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உரை சொல்ல வல்லவர்களாக ஓர் சிலரே நம்மத்தியில் உலாவுகின்றனர். வருத்தலுவிளான் திரு.ச.விநாயகமூர்த்தி, தென்மராட்சி விநாசித்தம்பி, குப்பிளான் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், பண்ணாகம் க.சிவபாதம், நுணாவில் குலசிங்கம், சைவப்புலவர் சித்தாந்தசெம்மணி செ.நவநீதகுமார் (எம்.ஏ), சைவப்புலவர் சு.செல்லத்துரை, நயினாதீவு ஆ.தியாகராசா, இணுவில் க.இராசேந்திரம் ஆகியோர் உரை சொல்பவர்களாக திகழ்கின்றார்கள். இணுவிலில் கெ.தவராசா, கமலநாதன், தம்பிராசா ஆசிரியர், அழகேசு சி.நடராசா, திருமதி.இ.லிங்காதேவி போன்றோர் புராணபடனம் செய்கின்றனர்.

இதே போன்று திருக்கோணமலையிலும் சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேலு, நிலாவெளியூர் க.கயிலாயபிள்ளை, விசுவர் சபாபதிப்பிள்ளை, கெஜரெத்தினம், கனகரெத்தினம், நிலாவெளி சித்திவிநாயகர் கோயிலில் பூசகராக இருந்த சண்முகக் குருக்கள், இவரது மகன் வேதாரணியக் குருக்கள், திரு.ந.மாணிக்கம், திரியாய் பொன்னம்பலம் முதலியோர் கந்தபுராண படனத்தில் பங்கு கொண்ட புராணிகர்களாவர். இவர்களுள் சண்முகக் குருக்கள் (பருத்தித்துறை), அவர்தம் மகன் ச.வேதாரணியக் குருக்கள், பண்டிதர் இ.வடிவேல், அமரர் க.கெஜரெத்தினம் ஆகியோர் சிறந்த பயன் சொல்லும் வித்தகர்களாக விளங்கினார்கள். அமரர் கெஜரெத்தினம் அவர்களின் மகன் கெ.சித்திரவேலாயுதன் அவர்களும் தற்போது திருகோணமலை முத்துக்குமாரசாமி கோவிலில் புராணம் படிப்பவராகவும் பயன் சொல்பவராகவும் விளங்குகின்றார்.

புராணபடன ஆய்வுக் கட்டுரையில் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் பின்வருமாறு விளக்கந் தருகின்றார். "வாசிக்கவே தெரிந்தவரும் பொருள் சொல்லத் தெரிந்தவரும் புராணம் பண்ணும் நிலைக்கு மேலாகப் பண்டிதர், வித்துவான்மார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் என்போரும் புராணபடனம் பண்ணி வந்ததால் யாழ்ப்பாணத்து இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி துரித முன்னேற்றங் கண்டிருந்ததும் உண்மை. விசேடமாக, வள்ளியம்மை திருமணப் படலம் படிக்கப்படுமிடங்களில் பிரசித்தி பெற்ற சுன்னாகம் குமாரசாமிப் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை தரத்தினர் பங்கு பற்றுதலால் அன்றைய புராணப் படிப்பு பிரசித்தமான இலக்கிய கலாரசனைக் களமாக நிலவியமை பற்றியசெய்திகள் யாழ்ப்பாண புராணபடன வரலாற்றில் மிகப் பலவாகும்''.

பண்டிதர்.வே.பேரின்பநாயகம்
தலைவர்
அகில இலங்கைத் திருமுறைமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளியம்மை திருமணப் படலம்

## இலக்கிய நோக்கில் சிறு உசாவல்

இந்திரராகலாம் புவிமிசை இன்பமுற வாழலாம் சிவகதியதனிற் சேரலாம் கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்து ஓதுவோர்!

கந்தபுராணம் கலைக்கடல் படிக்க நாவினிக்கும் கேட்கச் செவிக்கின்பம் தரும். "காதன் மழை பொழிந்த அருட் கொண்டலான கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்" என்பார் சம்பந்த சரணாலயர். அந்தளவுக்கு அறிவுறுத்தலாலும், இன்புறுத்தலாலும் இலக்கியப் பயன் நல்கும் பெருங்காவியம். ஞானகாவியமாய் ஞாலத்தில் ஒளி நல்கும் நன்னூல்!

மகாபுராணங்கள் பதினெட்டு. இவற்றுள் சைவ புராணங்கள் பத்து. இவை சாத்துவிக வெளிப்பாடானவை. இதில் வடமொழி ஸ்கந்தபுராண ஆறு சங்கிதைகளையுடையது் இதில் சங்கர சங்கிதை பன்னிரு காண்டங்களை உடையது. இவற்றுள் சிவரகசிய காண்டம் இருபத்து மூவாயிரம் கிரந்தங்களை உடையது. அவை ஏழு காண்டங்கள். இதில் முதல் ஆறு காண்டங்களையும் தமிழில் கச்சியப்ப சிவாச்சாரியார் பாடியதே தமிழ்ப் புராணமாக நாம் தலைமேற் கொண்டாடும் புராண நாயகமாகிய கந்தபுராணம். இதில் ஆறாவதாய் அமைந்தது தட்சகாண்டம். அதன் நிறைவாய் அமைந்தது வள்ளியம்மை திருமணப்படலம். தெய்வீக வரலாறு பகர்தல், தத்துவங்களை விரித்துரைத்தல், காவியப்பண்பு, பாத்திரப்படைப்பு, சமயச் செய்திகளை சமூகத்திடம் சேர்த்தல், அணிநயம், இலக்கியநயம், கவித்துவம் முதலான எண்ணற்ற தளங்களில் உயர்ந்து விளங்கும் இப்புராணம் "புராணகாவியம்" என்ற சிறப்பு நிலைக்குரியது என்பார் கலாநிதி செல்வரஞ்சிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசுப்பிரமணியம் அவர்கள். இதில் வள்ளியம்மை திருமணப்படலம் நிறைவான பகுதி என்றால் கவித்துவ நிறைவு, கற்பனை நிறைவு, சொற்பொருள் நிறைவு, தத்துவ நிறைவு என்று நிறைவுகளில் நிறைந்த அரும் பொருட் பகுதி!

முன்னதாக பார்வதி கல்யாணத்தில் ஒரு பதிவு. திருமணம் நடக்கிறது. பர்வதராஜனுடைய மனைவி மேனை கன்னியை நீர்வார்த்துத் தானம் செய்கிறார்.

"பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன்று ஆடன் கையை
பாசமதகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொடு அளித்தேன் என்னா நெடுமறை மனுக்கள்கூறி
வாசநல் லுலகமுய்த்தான் மருகனென்றவனை உன்னி"

என்று இந்தக் காட்சியைப் பாடுகிறார் கச்சியப்பர். இலகுவில் புரியும் காட்சி தான். ஆனால் உன்னியதுதான் உவப்பானது. பர்வதராஜன், மேனை தங்கள் மகளைச் சிவனாருக்குக் கொடுப்பதனால் சிவபிரான் "மருகன்" என்பது ஒரு பொருள். ஏலவே, தனக்கு "இவர் மருகன் தானே என்று அகங்காரம் கொண்ட தக்கனை நினைத்து" என்று வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை பகரும் கருத்தைப் பண்டிதமணியும் எடுத்து ஆளுவது காணலாம். இத்தகைய இலக்கிய நயமும் இன்னும் பல நயங்களும் நிறைந்தது வள்ளியம்மை திருமணப்படலம்.

வள்ளியம்மை தினைப்புனம் காக்கும் திறத்தை விளக்குகிறார் கச்சியப்பர். பரண்மேல் நின்று இறைவன் திருநாமங்களாகிய கற்களைக் கவணில் வைத்து எறிகிறார். மும்மலங்கள்தாம் பறவைகள். அவை கொத்தாதபடி சிவகதியாகிய ஞானப்பயிரைக் காக்கின்றார். இது கற்போர் களியுவை கொள்ளும் நயமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிதாம். ஆனால் மறுபுறம் வள்ளியம்மை யார்? முருகப்பெருமானின் தேவி. அவரைப்போய் வேடுவர்கள் தினைப்புனம் காக்கவைத்து விட்டார்களே என்று குறை! அதற்கு ஓர் உவமை. எளிதாகக் கிடைத்த உயர்ந்த இரத்தின மணியைத் தூக்கணாங்குருவி இருள் ஓட்டுவதற்காகத் தன் கூட்டில் வைத்தது போல இருந்தது என்கிறார்.

"காட்டில் எளிதுற்ற கடவுள் மணியைக் கொணர்ந்து
கூட்டில் இருள் ஓட்டக் குருகு உயர்த்த வாறன்றோ
தீட்டு சுடர் வேற்குமரன் தேவியாம் தெள்ள முதைப்
பூட்டு சிலைக் கையார் புறம் காப்பாற்ற வைத்ததுவே"
என்பது கச்சியின் கவியடிகள்.

அந்தத் தினைப்புனத்திலோ மைனாக்கள், புறாக்கள், மயில்கள், கிளிகள், குயில்கள், சேவல்கள் என்பன கவணுக்குப் பயந்து ஓடியும், பின்னை வள்ளியின் குரல் அழகிலும் தோற்ற அழகிலும் மீண்டும் திரும்பி அவ்விடம் நண்ணின என்பது அடுத்த நயமார்ந்த பகுதி! அதிலும் "ஆலோலம் ஆலோலம்" என்ற மொழியாட்சி எண்ணி மகிழத்தக்கது.

இதன்மேல், முருகப்பெருமான் வள்ளிமலை வந்தவுடன் அம்மணியைச் சந்தித்த காட்சி. வள்ளியிடத்து மையல். இதற்கப்பால் தந்தையை வைதல் தகுமோ? இதனால் பண்பாக, நாகரிகமாக ஓராதங்கம் வெளிப்படுத்தப்படுகிறது. "வாள்போன்ற கண்ணுடைய பெண்ணே உலகில் பெண்களுக்கெல்லாம் இறைவியாய் இருக்கும் உன்னைப்போல் உயர்ந்த இடத்தில் இல்லாமல் கானகத்தில் தினைப்புனம் காக்க வைத்தனரே" என்பது தான் செய்தி ஆனால் அதனை அப்பாவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில்லையோ என்னாது அந்த ஆராயும் அறிவை அயன் படைக்கவில்லை என்று அயன் மேல் பழி போடுகிறார் கச்சி.

"நாந்தகம் அனைய உன்கண் நங்கைகேள் ஞாலம் தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினார் புளினரா னார்கள்
ஆய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும் அயன்படைத் திலன்கொல் என்றான்"

மிக அருமையான நயம்மிகு கவிதை! இனி, வந்த முருகன் அந்த வள்ளியிடம் பேச்சுத் தொடங்கும் திறன் சாதாரணமாகச் சமூகத்தில் நாம் காணும் கெஞ்சுதல்தான்.

"மொழியொன்று புகலாயாயின் முறுவலும் புரியாயாயின்
விழியொன்று நோக்காயாயின் விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டாயாயின் மனமுஞ்சற்று உருகாயாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம் தவிர்தி என்றார்"

இப்படலத்தைப் பொறுத்தவரை முருகன் என்ற தலைவனின் மனநிலை இது காவியத்தைப் பொறுத்தவரை கடவுள் என்ற தலைவனிடம் மொழி புகலவேண்டும், முறுவல் புரிய வேண்டும், விழியினால் நோக்கவேண்டும், மனம் உருக வேண்டும். இல்லாவிடின் தீவினைகள் திரண்டு பழியாகி வருத்தும் என்று சித்தாந்தப் பிழிவு!

தலைவன், தலைவியிடம் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் கடந்து விண்ணப்பிக்கும் வேண்டுதல், பரமான்மாவிடம் ஜீவான்மா அணுகத் தவறின் வரும் விளைவு என இருதிறத்தால் பொருள் விளைத்த அருங்கவிதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிராஜன் வந்தபோழ்து திடீரென வேங்கை மரமாகிப் பின்னர், விருத்த தவவேடம் கொண்டார். "...தெண்ணீர் வேட்டனன் விருத்தன் வியநெறி சிறிதும் தேரின்.... காட்டுச் சுனைநீர்" என்றவர் தோற்றால் மட்டும் விருத்தர் என்றவாறு வேண்டித் தம் தாகத்தை - மோகத்தை வெளிப்படுத்துகின்றார். வள்ளியம்மை சீற்றத்துடன் பேசுகிறார். நரைமுடியுடையீர் நல்லறிவு ஏதுமில்லையே? உமக்கெல்லாம் எதற்கையா வயசாச்சு? என்றவாறு வள்ளியின் சினத்தைக் காட்டுகிறார் கச்சி.

"நத்துப்புரை முடியீர் நல்லறிவு சற்று மிலீர்
எத்துக்கு மூத்தீர்....?" என்பது பாடலடி.

இங்கு "எத்துக்கு மூத்தீர்" எதற்கு வயசாகியது? என்பது மட்டும் பொருளல்ல. எத்துதல் என்றால் ஏமாற்றுவதற்காக மூத்தீர் என்றும் பொருள். இதில் இருந்து தான் சுப்பிரமணிய பாரதியும் "எத்தித் திரியும் அந்தக் காக்கை" என்றார்.

சங்க அகத்திணையின் மாற்றமில்லாத ஒரு காதற் காட்சி இங்கு நிகழ்கிறது. முருகப்பெருமானும் வள்ளியம்மையும் தம்முட் கலந்து கொண்டனர்! வள்ளியம்மையின் அகமும் புறமும் மாற்றங்களைக் காண்பிக்கின்றன. இந்த மெய்ப்பாட்டு மாற்றத்தை மேல்வருமாறு சொல்கிறார் கவி.

"மைவிழி சிவப்பவும் வாய் வெளுப்பவும்
மெய் வியர் வடையவும் நகிலம் விம்மவும்
கைவளை நெகிழவும் காட்டும் தண்சுனை
எவ்விடை யிருந்துளது இயம்புவாய் என்றாள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திணை அழகின் உயர்ந்த காட்சி இது! இதன் மேல் கதை யாவர்க்கும் தெரியும். ஆனால் அதன் வெளிப்பாட்டு முறை விந்தைமிகுந்தது. சிந்திக்கச் சிந்திக்கச் செம்பொருள் நயம் தெளிக்கும் செவ்விய கவிதைகள்!

அறக்கருணை- மறக்கருணை, நன்றி மறவாமை, முருகதத்துவம், சைவ சித்தாந்த உட்பொருள் என்று பல்பொருள் பயந்த ஞானகாவியம், யுத்தகாண்டத்தில் யுத்தத்தை யுத்தமாகக் காட்டிய காவியம். யுத்தம் நிறைவான அடுத்த கட்டம் அகத்திணையை அகத்திணையாகப் பாடிய பெருங் கவித்திறன் சொல்லுமா றெங்ஙனம்?

கந்தபுராணம் என்ற மகா காவியத்தில் வள்ளியம்மை திருமணப்படலம் இலக்கிய நயமும் பொருட் செறிவும் நிறைந்த பகுதி, அறிவுறுத்தலும் இன்புறுத்தலும் அருமையாய்ப் பதிந்த பகுதி, நிறைவின் நிறைவு, என்றும் தகையவாய் நமக்குக் கிடைத்த பொக்கிசம். கச்சியப்ப சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி!

**கு.பாலஷண்முகன்**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நளமகாராஜா வழிபட்டு சனிதோக்ஷம் அகலப்பெற்ற சிவத்தலமான திருநள்ளாற்றுத் தல தேவாரங்களை சனிதோக்ஷமுள்ளவர்கள் சனிக்கிழமை தோறும் ஓதிவர தோக்ஷம் அகலும். தேவார முதலிகள் மூவரும் அருளிய திருப்பதிகங்களை ஓதி பயன்பெறுவோமாக.**

## திருஞானசம்பந்தர் தேவாரம்

பண் : பழந்தக்கராகம் முதலாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்று அண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலும் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே

ஆன்முறையால் ஆற்றவெண்ணீறு ஆடியணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பக்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றியகை
நான் மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்கவல்ல வார்ச்சடைமேல் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றை மாலை மதியோடு உடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம் பொற்பாத நிழல் சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே

ஏறுதாங்கி ஊர்திபேணி ஏர்கொள் இளமதியம்
ஆறுதாங்கும் சென்னிமேலோர் ஆடரவஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரைகொன்றை
நாறுதாங்கி நம்பெருமான் மேயது நள்ளாறே

திங்கள்உச்சி மேல் விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்கள்உச்சி எம்மிறைவன் என்றடியே இறைஞ்சத்
தங்கள்உச்சி யால் வணங்கும் தன்னடியார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண்கொள் முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடி திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண்கொள் முழுவதிர
அஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடி திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே

சிட்டமார்ந்த மும்மதிலும் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ண வெண்ணீறாடுவதன்றியும் போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணலாகா நஞ்சுகண்டத்து உண்டுடனே ஒடுக்கி
அண்ணலாகா அண்ணல் நீழல் ஆரழல்போலுருவம்
எண்ணலாகா உள்வினையென்று எள்கவலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிலும் உடனே
நாசம் செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந்தன் நல்ல
பண்புநள்ளாறு ஏத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகிலுறைவாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார் அருளியது

பண்: திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

உள்ளாறாததோர் புண்டரிகத்திரள்
தெள்ளாறாச் சிவ சோதித் திரளினை
கள்ளாத பொற் கொன்றை கமழ்சடை
நள்ளாறா என நம்வினை நாசமே

ஆரணப் பொருளாம் அருளாளனார்
வாரணத்துரி போர்த்த மணாளனார்
நாரணன் நண்ணி ஏத்து நள்ளாறனார்
காரணக் கலை ஞானக் கடவுளே

மேகம் பூண்டதோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத் தொட்டனவன்
பாகம் பூண்டமால் பங்கயத்தானொடு
நாகம் பூண்டு கூத்தாடு நள்ளாறனே

மலியுஞ் செஞ்சடை வாளரவம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்த புனிதனார்
நலியும் கூற்றை நலிந்த நள்ளாறர்தம்
வலியும் கண்டிறு மாந்து மகிழ்வனே

உறவனாய் நின்று உள்ளங் குளிர்ப்பவன்
இறைவனாகி நின்று எண்ணிறைந்தானவன்
நறவநாறும் பொழிற் திரு நள்ளாறன்
மறவனாய்ப் பன்றிப்பின் சென்ற மாயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கரங்கழி செஞ்சுடர்ச் சோதியார்
நக்கரங்கரவு ஆர்த்த நள்ளாறனார்
வக்கரன் உயிர் வவ்விய மாயற்குச்
சக்கரம் அருள் செய்த சதுரரே

வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
விஞ்சையிற் செல்வப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத்தவர்க்கு வழி கொடார்.
நஞ்ச நெஞ்சர்க்கு அருளு நள்ளாறரே

அல்லனென்று மலர்க்கருளாயின
சொல்லனென்று சொல்லாமறைச் சோதியான்
வல்லனென்றும் வல்லார் வளம் மிக்கவர்
நல்லனென்றும் நல்லார்க்கு நள்ளாறனே

பாம்பணைப்பள்ளி கொண்ட பரமனும்
பூம்பணைப் பொலிகின்ற புராணனும்
தாம்பணிந் தளப் பொண்ணாத் தனித்தழல்
நாம் பணிந்தடி போற்று நள்ளாறனே

இலங்கை மன்னன் இருபது தோளிற
மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்
நலங்கொள் நீற்றர் நள்ளாறரை நாடொறும்
வலங்கொள்வார்வினை யாயின மாயுமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார் அருளிய

## திருத்தாண்டகம்

ஆறாம் திருமுறை

### திருச்சிற்றம்பலம்

ஆதி கண்ணான் முகத்திலொன்று சென்று
அல்லாத சொல்லுரைக்கத் தன்கை வாளால்
சேதித் திருவடியைச் செல்ல நல்ல
சிவலோகநெறி வகுத்துக் காட்டுவதனை
மாதிமைய மாதொரு கூறாயினானை
மாமலர்மேலயனோடு மாலுங்காணா
நாதியை நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்ப்பெற்றுய்ந்தவாறே

படையானைப் பாசுபத வேடத்தானைப்
பண்டனங்கற் பார்த்தானைப் பாவமெல்லாம்
அடையாமைக் காப்பானை அடியார்தங்கள்
அருமருந்தை ஆவா என்றருள் செய்வாசைன்
சடையானைச் சந்திரனைத் தரித்தான்றண்ணைச்
சங்கத்த முத்தனைய வெள்ளையேற்றின்
நடையானை நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படஅரவமொன்று கொண்டு அரையிலார்த்த
பராபரணையெஞ்ஞீலி மேவினானை
அடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
அமுதாக உண்ட ஆதியானை
மடலரவம் மன்னு பூங்கொன்றையானை
மாமணியை மாணிக்காய் காலன்தன்னை
நடலரவம் செய்தானை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப்பெற்றுய்ந்தவாறே

கட்டங்கமொன்று தங்கையிலேந்திக்
கங்கணமும் காதிலிடு தோடுமிட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதையப் பூசிச்
சுந்தரனாய் சூலிங்கை யேந்தினானைப்
பட்டங்கமாலை நிறையச் சூடிப்
பல்கணமும் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப்பெற்றுயர்ந்தவாறே

உலந்தார்தம் அங்கங்கொண்டு உலகமெல்லாம்
ஒரு கொடியில் உழல்வானை உலப்பில் செல்வம்
சிலந்தி தனக்கு அருள் செய்த தேவதேவைத்
திருச்சிராப்பள்ளி எம் சிவலோகனைக்
கலந்தார்தம் மனத்தென்றும் காதலானைக்
கச்சியேகம்பானைக் கமழ்பூங்கொன்றை
நலந்தாங்கும் நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னை
குலவரையன் மடப்பாவை இடப்பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்
நலம் கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே

பூவிரியும் மலர்க்கொன்றைச் சடையினானைப்
புறம்பயத்தெம்பெருமானைப் புகலூரானை
மாவிரியக் களிறுரித்த மைந்தன் தன்னை
மறைக்காடும் வலிவலமும் மன்னினானை
திகழ்தக்கன் வேள்வியெல்லாம்
சிதைத்தானை உதைத்தவன்தன் சிரங்கொண்டானை
நாவிரிய மறை நவின்ற நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதியானைத்
தொல்லவுணர் புரமூன்றும் எரியச் செற்ற
வில்லானை எல்லார்க்கும் மேலானானை
மெல்லியலாள் பாகனை வேதம் நான்கும்
கல்லாலின் நீழற்கீழ் அறங்கண்டானைக்
காளத்தியானைக் கயிலைமேய
நல்லானை நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக்
குரைகழலால் கூற்றுவனைக் குமைத்தகோனை
அன்றாக அவுணர்புரம் மூன்றும் வேவ
ஆரழல்வாயோட்டி அடர்வித்தானைச்
சென்றாது வேண்டிற்றொன்று ஈவான் தன்னைச்
சிவனை எம்பெருமான் என்றிருப்போர்க்கென்றும்
நன்றாகும் நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே.

இறவாமே வரம்பெற்றேன் என்று மிக்க
இராவணனை இருபதுதோள் நெரியவூன்றி
உறவாகி இன்னிசை கேட்டிரங்கி மீண்டே
உற்றபிணி தவிர்த்தருள வல்லான்றன்னை
மறவாதார் மனத்தொன்றும் மன்னினானை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார் செஞ்சடையானை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப்பெற்றுய்ந்தவாறே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரர் தேவாரம்

பண் : தக்கேசி ஏழாந் திருமுறை

## திருச்சிற்றம்பலம்

செம்பொன்மேனி வெண்ணீறணிவானைக்
கரியகண்டனை மாலயன் காணாச்
சம்புவைத்தழல் அங்கையினானைக்
சாமவேதனைத் தன்னொப்பிலானைக்
கும்பமாகரியின் உரியானைக்
கோவின்மேல்வரும் கோவினை எங்கள்
நம்பனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே

விரைசெய் மாமலர்க் கொன்றையினானை
வேதகீதனை மிகச்சிறந்துருகிப்
பரசுவார் வினைப் பற்றறுப்பானைப்
பாலோடானஞ்சும் ஆடவல்லானைக்
குரைகடல்வரை ஏழுலகுடைய
கோனை ஞானக் கொழுந்தினைத்தொல்லை
நரைவிடையுடை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனல் அனல் வெளியைச்
சேவின் மேல்வரும் செவ்வனைச் சிவனைத்
தேவதேவனைத் தித்திக்கும் தேனைச்
காவியங்கண்ணி பங்கனைக் கங்கைச்
சடையனைக் காமரத்திசை பாட
நாவிலூறும் நள்ளாறனை அமுதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயினேன் மறந்தென் நினைக்கேனே
தஞ்சம் என்றுதன் தாயாதுவடைந்த
பாலன்மேல் வந்த காலனை உருள
நெஞ்சிலோர் உதை கொண்ட பிரானை
நினைப்பவர் மனம் நீங்ககில்லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
கடைந்த வேலையுள் மிக்கெழுந்தெரியும்
நஞ்சம் உண்ட நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே

மங்கை பங்கனை மாசிலாமணியை
வானநடனை ஏனமோடன்னம்
எங்கு நாடியும் காண்பரியானை
ஏழையேற்கு எளிவந்தபிரானை
அங்கம் நான்மறையால் நிறைகின்ற
அந்தநாளர் அடியது போற்றும்
எங்கள் கோனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே

கற்பகத்தினைக் கனகமால் வரையக்
காமகோபனைக் கண்ணுதலானைச்
சொற்பதப்பொருள் இருளறுத் தருளும்
தூயசோதியை வெண்ணெய் நல்லூரில்
அற்புதப்பழ ஆவணங்காட்டி
அடியனா என்னை ஆளது கொண்ட
நற்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவனையன்று பன்றிப்பின் சென்ற
மாயனை நால்வர்க்கு ஆலின் கீழுரைத்த
அறவனை அமராக்கரியானை
அமரர் சேனைக்கு நாயகனான
குறவர் மங்கை தன் கேள்வனைப் பெற்ற
கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவிரியும் நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என்நினைக்கேனே

மாதினுக்கு உடம்பு இடங்கொடுத்தானை
மணியினைப் பணிபவர் வினை கெடுக்கும்
வேதனை வேள்வியர் வணங்கும்
விமலனை அடியேற்கு எளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே

இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை
எடுப்ப ஆங்கு இமவான் மகள் அஞ்சத்
துலங்கு நீள்முடி ஒருபதுந்தோள்கள்
இருபதும் நெரித்து இன்னிசை கேட்டு
வலங்கை வாளொடும் நாமமும் கொடுத்த
வள்ளலைப் பிள்ளை மாமதிச்சடைமேல்
நலங்கொள் சோதி நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிந்த சோலைகள் சூழ்ந்த நள்ளாற்றெம்
சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை
மறந்து நான் மற்று நினைப்பதேதென்று
வனப்பகையப்பன் ஊரவன் தொண்டன்
சிறந்த மாலைகள் அஞ்சினோடஞ்சும்
சிந்தையுள் உருகிச் செப்பவல்லார்க்கு
இறந்து போக்கில்லை வரவில்லையாகி
இன்பவெள்ளத்துள் இருப்பர்களினிதே

திருச்சிற்றம்பலம்


## பெரியபுராணம்

பங்கயப்பாசடைத் தடஞ்சூழ் பழனநாட்டு
அகன்பதிகள் பலவும் நண்ணி
மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயில்
எனைப் பலவும் வணங்கிப் போற்றித்
தங்கிசையாழ்ப் பெரும் பாணருடன்
மறையோர் தலைவனார் சென்று சார்ந்தார்
செங்கைமான் மழுவேந்தும் சினவிடையார்
அமர்ந்தருளும் திருநள்ளாறு

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியையா அவர்கள் தன்னிலை தானுணர்ந்து தன்
வாழ்வின் நிறைவினை தான் அறிந்து தன்
வாழ்வின் இறுதி நேரத்தில் அவர் பாடிய பாடல்

வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதான் ஒழிந்தால்
தினைப்போதளவும் நில் லாதுகண்டாய் சிவன் பாதம்நினை
நினைப்போரை மேவு நினையாரைநீங்கி இந்நெறியில் நின்றால்
உனைப்போல் ஒருவருண்டோ மனமே எனக்கு உற்றவரே

- பட்டினத்தார் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்


நூற்றியாறு வயது வரை இம்மண்ணில் வாழ்ந்து மூன்று தலைமுறையினர்க்கு எழுத்தறிவித்து கந்தபுராணத்தில் வித்தகராய் விளங்கி தனது நிறைவு மூச்சுவரை நிதானமாக வாழ்ந்த எமது குடும்பப் பெருந்தலைவர், பெருவிருட்சம், பெரும் பொக்கிஷம் எம்மை விட்டுப் பிரிந்ததை அறிந்தவுடன் உடனடியாக வந்து உரிய ஒழுங்குகளை மேற்கொண்ட அயலவர்க்கும் உறவினர்க்கும் தொலைபேசி மூலமும் முகநூல் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தோர்க்கும் நேரடியாக வந்து அஞ்சலி செய்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொரோனாப் பதற்ற நிலையிலும் நிலாவெளியில் இருந்தும் திருமலை நகரத்திலிருந்தும் வருகை தந்து அஞ்சலி செலுத்திய உறவுகளுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். மரணப் படுக்கையில் தான் கிடக்கின்ற போது நிறைந்தளவில் திருமுறைகளே ஓதப்பட வேண்டும் என்ற அவருடைய பேரவாவைப் பூர்த்திசெய்யும் வண்ணம் உரிய திருமுறைகளைப் பண்ணோடு ஓதிய அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினருக்கும் ஏனையோருக்கும் நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிப காலத்தில் திருமலையில் வாழ்ந்தபோது அவ்வப்போது சந்தித்து வைத்திய ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கிய டாக்டர் ச.கோகுலன் அவர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இறுதிக் காலத்தில் இவரைப் பரிசோதித்து ஆலோசனைகளையும் மருந்துகளையும் வழங்கிய டாக்டர் க.சிவராசா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

2013 இல் இருபாலையில் வாழ்ந்த போதும், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த போதும் 2017 ஆம் ஆண்டு முதலும் அவருக்கு உதவியாளராகப் பணி செய்த திரு.க.பன்னீர்ச்செல்வம் அவர்களுக்கும் எமது நன்றிகள். இந்நினைவுமலருக்கான இரங்கற் செய்திகள், கட்டுரைகள் போன்றவற்றை வழங்கிய அன்பர்களுக்கும் நன்றிகள். அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய வைபவங்களிற் கலந்து சிறப்பித்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

கயிலாயபிள்ளை + மாணிக்கம்

- கெஜரெத்தினம்
- கனகரெத்தினம்

இல

**கெஜரெத்தினம்**

- இராசநாயகி + தில்லையம்பலம்
  - சுபத்ரா + இரட்ணராசா
    - வித்தகி, வித்தகன்
  - சுமதி + குகதீசன்
    - வர்ணா, செழியன்
  - சுபாஜினி + பிரேமகாந்தன்
    - கிரிதரன், பிருந்தா
  - சுரேந்திரன் + மேனகா
    - பிரவீனா, பிரகாசினி
  - சுரேந்தி + சிவநாதன்
    - அருளினி, பிரணவி
- சித்திரவேலாயுதன் + குணரஞ்சிதமலர்
  - கஜபதி + மதுராந்தகி
    - தக்ஷாயனி
  - கஜராஜ் + சுகிர்தா
  - மயூரன்
- மகேஸ்வரி + தில்லைநாதன்
  - சுகிர்தா + முகுந்
    - கேசவி, வித்தியன், தர்மிகா
  - பிரபாரூபன் + ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சபாபதிப்பிள்ளை + கனகம்மா

- **இலட்சுமிப்பிள்ளை**
- செல்வராசா
- முத்துராசா

இலட்சுமிப்பிள்ளை:

தகி

- மகேஸ்வரி + தில்லைநாதன்
  - சுகிர்தா + முகுந்தன்
    - ↓ கேசவி, வித்தியன், விசாலினி, தர்மிகா
  - பிரபாரூபன் + சாந்தரூபி
- தவராசா + சகுந்தலாதேவி
  - சங்கீதா + சுகந்தன்
    - ↓ மாதுரி, கௌசிகன், மதுசிகன், மாதுமை
  - வாசுகி + ஷதூர்ஷன்
    - ↓ நிலாஷன்
  - நாராயணி
  - எழிலினி
- தர்மகுலராசா + செல்லநாச்சியார்
  - ஜெகரூபன் + தாரணி
    - ↓ கோவர்த்தனி, பிரகீசன், யுகசீசன்
  - சாந்தரூபி + பிரபாரூபன்
  - கஜரூபன் + நித்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org